விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 25 சனிக்கிழமை (07.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 050

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# தமிழ் மக்களின் பாதுகாப்பை ஐ.நா.பொறுப்பேற்க வேண்டும்

## ஐ.நா. பிரதிநிதியிடம் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வவுனியாவுக்கு வரும் மக்களின் பாதுகாப்பை ஐ.நா. பொறுப்பேற்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது. கொழும்புக்கு வந்துள்ள ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் சந்தித்து இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு அலுவலகம் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் மீது அடையாளம் தெரியாத குழுவினர் தாக்குதல் நடத்தியதனால் அலுவலகக் கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டதுடன்அங்கு கடமையிலிருந்த பணியாளர்கள் சிலருக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாக அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளார்.

இச்சம்பவத் (12ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கம் மீது அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ தாக்குதல்கள் தொடர்பில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பதற்றத்தை தூண்டியதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் மத்தியில் பயப்பிராந்தியை ஏற்படுத்தும் வகையில், மோதல் பகுதிகளின் தேவைகளுக்கென முப்பத்தையாயிரம் பிரேதப் (12ஆம் பக்கம் பார்க்க)

## காலை முதல் மாலை வரை ஷெல் மழை வன்னியில் 48 பேர் பலி; 174 பேர் காயம்

(கொழும்பு)

வன்னியில் நேற்று படையினர் பரவலாக நடத்திய பீரங்கித் தாக்குதல்களில் 48 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 174 பேர் காயமடைந்துள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாத்தளான், தேவிபுரம், சுதந்திரபுரம், மூங்கிலாறு, உடையார்கட்டு மற்றும் வள்ளிபுனம் ஆகிய பகுதிகளில் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாத்தளான் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட ஆட்டிலறி பீரங்கித் தாக்குதலில் 5 பேர் படுகொலை செய்யப்பட்டு 13 பேர் காயமடைந்துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் நண்பகல் 12 மணியளவில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் சிறுவர்களான சகோதரர்கள் இருவர் படுகொலை (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பொதுமக்களுக்கு படையினரால் பாதிப்பில்லை

### ஐ.நா. செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் வடக்கிலுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு தொல்லைகள் ஏற்படாத வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கிக் கூறியுள்ளார்.

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் நேற்று முன்தினம் மாலை (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு காண்பதற்கு புலிகள் முன்வரவேண்டும்!



### எரிக் சொல்ஹெய்ம் வேண்டுகோள்

(கொழும்பு)

இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது. ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அமைதியான முறையில் அரசியல் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு கனரக ஆயுதங்களை அனுப்ப பிரிட்டிஷ் அரசு ஒப்புதல்

(லண்டன்)

பல இலட்சம் டொலர்கள் பெறுமதியான ஆயுத தளபாடங்களை இலங்கை அரசிற்கு விற்பனை செய்யும் ஒப்பந்தத்திற்கு பிரிட்டன் அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

கனரக இயந்திரத் துப்பாக்கிகள், இராணுவ விமானங்களிற்கான தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் ஹெலிகொப்டர் உதிரிப் பாகங்கள் என்பன இவ் விற்பனை ஒப்பந்தத்தில் அடங்குகின்றன.

இதேவேளை இலங்கைக்கு ஆயுதம் விற்பது தொடர்பான தனது கொள்கையை பிரித்தானிய அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வெளியுறவு விசேட குழுவின் தலைவரான தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மைக் கேப்ஸ் கூறியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## 2,700 சிவிலியன்கள் படையினரிடம் தஞ்சம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேறிவரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக இராணுவத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்றும் மட்டும் 2 ஆயிரத்து 700ற்கும் அதிகமான பொதுமக்கள் படையினரிடம் (12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே தேவை

## தமிழக ஆய்வில் 90 வீதமானோர் ஆதரவு

(சென்னை)

ஈழத்தமிழர் விடயத்தில் தமிழக மக்களின் மனநிலை பற்றிய கருத்துக்கணிப்பு முடிபுகளை லயோலா கல்லூரி நேற்று வெளியிட்டது.

இலங்கையில் தற்போது நடந்துவரும் போரில், விடுதலைப்புலிகளைக் காரணமாக வைத்து தமிழினத்தையே இலங்கை அரசு அழித்துவருகிறது என்று 86.5 வீத பேரும், ராஜபக்ஷ அரசு தனது அரசியல் ஆதாயத்திற்காக இலங்கை மக்கள் மீது தேவையற்ற ஒரு போரைத் திணித்துள்ளது என்று 10.5 வீத பேரும் தமிழர்களை மீட்க இலங்கை அரசு போர் நடத்துகிறது என்று 2 வீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் நடந்துவரும் மோதல் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஐ.நா. அமைத்துள்ள மருத்துவமனைகள், மக்கள் பாதுகாப்பு வலயங்கள், வன்னியில் தவிக்கும் தமிழர்கள் என சிங்கள இராணுவம் குண்டு மழை பொழிகிறது.

ஈழத்தமிழர்கள் விடயத்தில் தமிழக அரசும், தமிழக அரசியல் கட்சிகளும் கடந்த சில மாதங்களாக சற்று அதிகமாக குரல் கொடுத்து வருகின்றன.

கடந்த வாரத்தில் முத்துக்குமாரன் என்ற 26 வயதான இளைஞர் ஈழத்தமிழர்களை காக்கக் கோரி தீக்குளித்தார். இச் சம்பவம் தமிழகத்தில் மிகப் பெரிய எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் லயோலா கல்லூரியின் மக்கள் ஆய்வகம் நடத்திய ஈழத்தமிழர் விடயத்தில் தமிழக மக்களின் மனநிலை பற்றி கருத்துக்கணிப்பு முடிபுகள் நேற்று வெளி யிடப்பட்டது. இந்த கருத்துக்கணிப்பில் மக்கள் முன் ஈழப்பிரச்சினை குறித்து பல்வேறு கேள்விகளை வைத்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் போர் குறித்த செய்திகளை கண்ணுறும் போது கோபமே மிகப் பிரதான உணர்வாக வெளிப்படுவதாக 85 வீதமானோர் தெரிவித்துள்ளனர்.

மத்திய, மாநில அரசுகள் மீது 44.5 வீதமானோரும், 25.5 வீதமானோர் ராஜபக்ஷ அரசின் மீதும், சர்வதேச சமூகங்கள் மீது 12 வீதமானோரும், விடுதலைப் புலிகள் மீது 3 வீதமானோரும் கோபமே மிகப் பிரதான உணர்வாக வெளிப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிச்சினைக்கு உடனடித் தீர்வாக, உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து அரசியல் தீர்வு காணப் பேச்சுவார்த்தையை தொடங்குவது என 90 வீதமானோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக தனி ஈழமே என்று 68 வீதமானோரும் ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சி என்று 21 வீதமானோரும் தமிழரைப் பௌத்த-சிங்களவருக்கு சமமாக அங்கீகரித்து இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று 4.5 வீதமானோரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஈழப்பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் ராஜபக்ஷ அரசின் மீது எந்தவிதச் சிறு தாக்கத்தைக் கூட ஏற்படுத்தவில்லை என 91.5 வீதமானோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவான எழுச்சி உருவாகியுள்ளது என 43 வீதமானோரும் மத்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியுள்ளது என 32.5 வீதமானோரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஈழத்தமிழர் நலனில் உண்மையான அக்கறை கொண்டுள்ள தமிழகக்கட்சி எதுவுமில்லை, எல்லாமே தேர்தல் அரசியலே செய்கின்றன என 52 வீதமானோரும் கருத்து தெரிவித்துள்ளனர். (ச-5)

## வழுக்கையாறு புனரமைப்பு திட்டத்தை துரிதமாக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வழுக்கையாற்று புனரமைப்பு திட்ட மானது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் தேவைக் கேற்ப அதன் முன்னேற்ற வேகம் போதாது என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 3-ம் திகதி வழுக்கையாற்று புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வழுக்கையாற்று புனரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் தடைகளை இனங்கண்டு அவற்றை உடனடியாக அகற்றி இத்திட்டத்தை வெகு விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் இதன் மூலன பயனை எமது மக்கள் வெகு விரைவில் அநுபவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இம் மாநாட்டின் போது வழுக்கையாற்று புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற தொண்டமானாறு புனரமைப்பு, உவர் நீர்த் தடுப்பு திட்டங்கள், உப்பாறு உவர் நீரேரி திட்டம் போன்றவை தொடர்பிலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இம் மாநாட்டில் யாழ் அரச அதிபர் க. கணேஷ், பிரதித் திட்டப்பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்கள உயரதிகாரிகள், குத்தகைக்காரர்கள், தேசவள விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ச)

## கொமர்ஷல் வங்கியின் அருணலு விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு கௌரவிப்பு விழா நாளை கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையில் அருணலு சேமிப்பு கணக்கில் பரீட்சை திகதியில் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வைப்பிலிட்டிருந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இக் கௌரவிப்பு விழா நடத்தப்படுகிறது.

இதற்கமைவாக கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையில் அருணலு சேமிப்பு கணக்கில் பரீட்சை தினத்தில் 5ஆயிரம் ரூபாய்க்கு மேல் வைப்பிலிட்டிருந்த 2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சைகளில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ். ரவீந்திரா கேட்டுள்ளார். (ச)


சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 162ஆவது

ஆராதனை விழா - 2009

காலம் : 2009.02.09 திங்கட்கிழமை
நேரம் : முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை
இடம் : யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

தலைவர்

திருமதி அ.வேதநாயகம்

(யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட.இ.ச.சபைத் தலைவரும்.)

இசை ஆர்வலர்களை கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

(C-2112)


## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சி எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை என்பவற்றுடன் மதியம் 12.30 மணிக்கு நிறைவு பெறும். அதிகாலை 5.00 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெறும். (ச-14)

## மன்னிப்புக் கோரியது ஐக்கிய நாடுகள் சபை

தடை செய்யப்பட்டுள்ள கொத்தணிக் குண்டுகளை இலங்கை இராணுவம் பயன்படுத்தியதாக ஐ.நா. ஸ்தாபனம் சுமத்திய குற்றச்சாட்டு பிழையானதென்றும் அதற்காக ஐ.நா. ஸ்தாபனம் இலங்கை அரசிடம் மன்னிப்புக் கோரியிருப்பதாகவும் சமாதான செயலகத்தின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா. ஸ்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் இலங்கை அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் தெரிவித்த இக்கருத்துகளுக்கு ஐ.நாவின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஐ.நா. ஸ்தாபனம் இலங்கை அரசிடம் மன்னிப்புக் கோரியிருப்பதால் ஐ.நாவின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச பொது மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையையும் திருத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கல்வித்தின வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் அனுசரணையுடன் யாழ்ப்பாணக் கல்வி வலயம் நடத்தும் 'கல்வி அபிவிருத்திப் பயணம்' கல்வித்தின வெளியீடு இன்று காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-14)

## 60 பயணிகளுடன் சென்ற மினிவான் மின் கம்பத்துடன் மோதி விபத்து

காரைநகரிலிருந்து சுமார் 60 பயணிகளுடன் யாழ். நோக்கி வந்த மினி வான் ஒன்று விபத்துக்குள்ளானது. இச்சம்பவம் நேற்றுக் காலை ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் காரைநகரிலிருந்து புறப்பட்ட மினிவானின் முன் சக்கர ரயர் வெடித்ததில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. மினிவானில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டனர். (ச-7)


01/07/2008

விபத்துக்குள்ளான மினிவான்


நீங்கா நினைவில் ஏழு ஆண்டுகள்

மலர்வு
15
12
1943



உதிர்வு
07
02
2002

அமரர்

வாதவூர் தவச்செல்வம் J.P

(சாயிராம் கட்டட ஒப்பந்தகாரர், வேலணை மேற்கு)

எங்கள் அன்புத் தெய்வமே என்றும் உங்களை மறவோம்

21/3A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

உங்கள் நினைவில் வாழும்,
குடும்பத்தினர்.

(இ)

# இன்று ஒரு தகவல்

## சொர்க்கமும் நரகமும்

ஒரு கோயிலில் ஆன்மீகச் சொற்பொழிவு நடந்து கொண்டி ருந்தது.

ஒரு பெரியவர் பேசிக்கொண்டிருந்தார். கடவுளைப் பற்றியும், சொர்க்கத்தைப் பற்றியும், மனிதனைப் பற்றியும் விபரமாக பேசினார். எல்லோரும் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு தத்துவ ஞானியும் இருந்தார்.

பேசி முடித்ததும் அந்தப் பெரியவர் நேராக அந்த தத்துவ ஞானியிடம் வந்து, "எப்படி இருந்தது என் பேச்சு?" என்று கேட்டார்.

"நீங்கள் பேசியது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது" என்றார் அவர்.

"அப்படி என்ன தவறாகப் பேசினேன்?" என்றார் அவர்.

"கடவுளை நம்புபவன் சொர்க்கத்துக்குப் போவான்" என்று சொன்னீர்கள். பின்னர் நல்லவிதமாக வாழ்பவனும் சொர்க்கத்துக்குப் போவான் என்றீர்கள்.

அதாவது ஒருவன் எல்லாத்தவறும் செய்து கொண்டு கடவுளை நம்பினால் அவன் சொர்க்கத்திற்குப் போவானா? அல்லது ஒருவன் ஒருதவறும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து கொண்டு கடவுளை நம்பாமல் இருக்கிறான். அவன் என்ன நரகத்துக்கா போவான்?

கடவுள் நம்பிக்கையுள்ள திருடன் எங்கே போவான்?

கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன ஆவான்? ஒருவன் கடவுள் நம்பிக்கையுடன் வாழ்வது முக்கியமா? நல்லவனாக வாழ்வது முக்கியமா? என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் குழம்பிப் போய்விட்டார். அவர் சொன்னதும் நியாயம்தான்.

கடவுளை நம்புபவன் தான் சொர்க்கத்திற்குப் போவான் என்றால் பேசாமல் கடவுளை நம்பிக்கொண்டு இந்த உலகத்தில் எல்லாத் தவறும் செய்து கொண்டு இருக்கலாமே!

பேச்சாளர் குழப்பத்துடன் வீட்டுக்குப் போனார். படுத்துத் தூங்கினார். ஒரு கனவு கண்டார்.

கனவில், அவர் ஒரு ரயிலில் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறார். எதிரில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, "நாம் இப்பொழுது எங்கே போகிறோம்?" எனகிறார்.

"சொர்க்கத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்றார் அவர்.

ரயில் போய் நின்றது இவர் இறங்கினார். சொர்க்கத்தில் கௌதம புத்தர், சோக்கிரடீஸ் இருப்பார்கள். அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு என்று நினைத்துக் கொண்டு அங்கும் இங்கும் பார்த்தார். அங்கு யாரும் இல்லை. அந்த இடம் பாலைவனம் மாதிரி இருந்தது. பசுமையான எவற்றையும் காணவில்லை. முனிவர்களெல்லாம் எலும்பும் தோலுமாக உட்கார்ந்திருந்தார்கள்.

இவர் அங்கு போய் "புத்தர், சோக்கிரடீஸ் எல்லாம் எங்குக் கிறார்கள்?" என்று கேட்டார்.

"அப்படி ஒருவரும் இங்கில்லையே! அவர்களெல்லாம் யார்?" என்று திருப்பிக் கேட்டார்கள் அவர்கள்.

இவருக்கோ அதிர்ச்சி. அப்படியானால் அவர்கள் எங்கு போயிருப்பார்கள்?

உடனே ஓடிப்போய் ரயிலில் ஏறினார். ரயில் புறப்பட்டது. நரகம் நெருங்க நெருங்க காற்று குளிர்ச்சியாக வீசியது. அங்கே பசுமையான தோட்டங்கள், நீர் நிலைகள், நந்தவனங்கள் எல்லாம் கண்ணில் பட்டது.

அங்கிருந்தவர்களும் மகிழ்ச்சியாகவும் உல்லாசமாகவும் இருந்தார்கள். எங்கு பார்த்தாலும் ஆடல் பாடல்கள். இவர் ரயிலை விட்டு இறங்கினார். அவருக்கு சந்தேகம்!

"இதுவா நரகம்?" என்றார்.

"ஆமாம்" என்றார்கள்.

"கௌதம புத்தர், சோக்கிரடீஸ் போன்றவர்கள் கூட இங்கிருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"இங்கிருக்கின்ற பசுமையும், பச்சைப் பயிர்களும், ஆடல் பாடல்களும் கௌதம புத்தர், சோக்கிரடீஸ் மற்றும் மகான்கள் வந்த பின்புதான் உண்டாயிற்று. இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றி விட்டார்கள். அதனால் இங்கிருப்பவர்கள் யாருமே சொர்க்கத்திற்குப் போக விரும்புவதில்லை" என்றார்களாம்.

இந்த அதிர்ச்சியிலேயே அந்தப் பெரியவர் முழித்துக் கொண்டாராம்.

இதில் இருக்கும் கருத்து என்னவென்றால், நல்லவர்கள் எங்கிருக்கிறார்களோ அந்த இடத்துக்கு பெயர்தான் சொர்க்கம்.

சொர்க்கம், நரகம் என்பதெல்லாம் ஆன்மீகப் பண்புகள் அவ்வளவு தான்.

ஒரு ஊரில் இரண்டு இணைபிரியாத நண்பர்கள் இருந்தார்கள். அதில் ஒருவன் கேட்டான் :

"இப்பொழுது கடவுள் நம் முன்னால் வந்து உங்கள் இருவரில் யாராவது ஒருவர் மட்டும் என்னுடன் சொர்க்கத்திற்கு வரலாம் என்று கூப்பிட்டால் என்ன செய்வாய்?" என்றான்.

"உன்னையே அழைத்துக் கொண்டு போகச் சொல்வேன்" என்றான் இவன்.

"அப்படியானால் உனக்கு சொர்க்கம் வேண்டாமா?" என்றான் அவன்.

"நீ என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாயானால் பின்னர் இந்த பூலோகமே எனக்கு சொர்க்கம் தானே!" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் பலர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைப்பு

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்

(கொழும்பு)

கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களிலும், இரகசிய முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 120 இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள பிரதியமைச்சர், இது தொடர்பில் உறவினர்கள் தன்னிடம் முறையிட்டுள்ளதாகவும் கூறினார்.

கொழும்பிலும் சுற்று புறங்களிலும் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றமை குறித்து கேட்ட போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தம்மை அடையாளப்படுத்தக் கூடிய ஆவணங்கள் இருந்தும் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாகவும், அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் அனைவரும் வடக்கு கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# தேசிய மட்ட எழுத்தாக்கப் போட்டி மார்ச் 7 ஆம் திகதி நடைபெறும்

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழித் தின தேசிய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறுமென கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பாடசாலை பிரிவு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையின் 9 மாகாணங்களிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட போட்டி நிலையங்களில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணத்திற்கு 4 போட்டி நிலையங்கள் ஏற்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டுக்கான மற்றைய தேசிய மட்டப் போட்டிகள் மார்ச் மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, தேசிய மட்டப் போட்டிகள் யாவும் கொழும்பு இந்து கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை சைவமங்கையர் கல்லூரி மற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரி என்பவற்றில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் யாவும் 2008 ஆம் ஆண்டில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் கடந்த ஆண்டில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இராசி பலன்

*07.02.2009*
*(தை 25, சனிக்கிழமை)*
*திருவாதிரை காலை 6.38 மணிவரை*
*திரயோதசி பின்னிரவு 1.27 மணிவரை*
*புணர்பூசம் பின்னிரவு 5.03 மணிவரை*
*இராகுகாலம் 9.35-11.05 மணிவரை*
*சுபநேரம் 3.35-5.05 மணிவரை*
*சனிப்பிரதோஷ விரதம்*

| | |
|---|---|
| மேடம் | போசன சுகம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| இடபம் | முயற்சி தாமதம், பணவிரயம், ஆரோக்கியக் குறைவு, உணர்ச்சி வசப்படல். |
| மிதுனம் | நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, திடீர் நன்மை. |
| கடகம் | காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, பிரயாணம், சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, தொழில் வருமானம், உறவினர் கலந்துரையாடல். |
| கன்னி | அதிகாரம், நண்பர்கள் உதவி, நல்ல செய்தி, கடின முயற்சி. |
| துலாம் | பிதா சிந்தை, எடுத்த காரியம் தாமதமாகும், புதிய திட்டமிடல், கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, பிரயாண பயம், முயற்சி தாமதம், உஷ்ண வியாதி. |
| தனுசு | நல்ல செய்தி, போசன சுகம், காரிய அனுகூலம், களஸ்திர நன்மை. |
| மகரம் | பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், ஆரோக்கியம், தொழில் விருத்தி. |
| கும்பம் | ரோக நிலை, காரிய தாமதம், வியாபார சிந்தை, பணக் குறைவு. |
| மீனம் | மனச் சஞ்சலம், காரிய தாமதம், மாதா சுகம், புதிய விடய். |

வளவன்

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உப பீடாதிபதிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் புதிதாக உப பீடாதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள் ளனர். செல்வி. நி. நல்லையா (கல் வியும் தரமேம்பாடும்), திருமதி. ஜெ. தியாகலிங்கம்(நிதி நிர்வாகம்), திரு மதி என் சிவபாதம் (கட்டுறு பயிற்சி) ஆகிய கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே இவ் வருட ஆரம்ப முதல் உபபீடாதிபதிக ளாகக் நியமனம் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# இலங்கை மீனவர்களின் தூண்டில்கள் மாயம்

இலங்கை புத்தளம் பகுதியிலிருந்து 6 மீனவர்கள் பைபர் படகில் இந்திய எல்லையில் கடந்த 3ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றனர். இவர்களை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து கியூ பிரிவினரிடம் ஒப்படைத்தனர். விசாரணைக்காக மண்டபம் தமிழ் நாடு ஹோட்டலில் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.இதன் அருகே உள்ளகடற்கரையில் இவர்கள் பயன்படுத்திய படகுநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த பகுதி 24மணி நேர கடலோர காவல்படை கண்காணிப்பில் உள்ளது .இந் நிலையில் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள்படகை பார்வையிட்ட போது மீன்பிடிப்பதற்காக பயன்படுத்திய இலட்ச ரூபாய் மதிப்பிலான தூண்டில்களைக் காணவில்லை என பொலிஸாரிடம் முறையிட்டனர். (ஓ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 260 |
| உருளைக்கிழங்கு | 120 | 100-110 |
| பச்சைமிளகாய் | 260 | 200 |
| தக்காளி | 280 | 250 |
| அவரை | 40 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 80 | 100 |
| கரட் | 80 | 70 |
| பூசணி | 80 | 90 |
| புடோல் | 80 | 70 |
| வாழைக்காய் | 160 | 180 |
| சின்ன வெங்காயம் | 45 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 |
| பாகற்காய் | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 |
| பயிற்றங்காய் | 200 | 170 |
| லீக்ஸ் | 180 | 160 |
| போஞ்சி | 80 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30-35 |

(7)




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து இரத்ததானம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் கழக தலைவர் லயன் டாக்டர் இ. சாந்தன் இரத்தானம் வழங்குவதையும் அருகில் கழக முன்னாள் தலைவர் கே. எஸ். துரைரட்ணம் தாதிய உத்தியோகத்தர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நவரட்ணராஜா விளையாட்டுத்திடலில் அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக புத்தூர் வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் த.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். குணதாசன், காங்கேசன்துறை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் ப.கார்த்திகேசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-7)

அல்வாய் சிறிலங்கா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.செல்வச்சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், சிறப்பு விருந்தினராக அல்வாய் வடக்கு கிராம அலுவலர் எஸ். சிவபாலசிங்கம், இளைப்பாறிய அதிபர் கே.எஸ். கந்தசாமி, வேலாயுத மகாவித்தியால ஆசிரியர் பி.சூரியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

# சதுரங்கப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிற்கிடையேயான சதுரங்கப் போட்டி இன்று சனிக்கிழமை 15,19 வயது ஆண்களுக்கும் நாளை மறுநாள் திங்கட்கிழமை 19 வயதுப் பெண்களுக்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் காலை 8.30க்கு நடை பெறவுள்ளது. (ஓ-29)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்க புதிய வருட அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக வே.குணசிங்கம், உப தலைவராக க.சிற்றம்பலம், செயலாளராக க.ஆனந்தக்குமாரசாமி, உபசெயலாளராக க.சிறீஸ்கந்தராசா, பொருளாளராக க.கதிர்காமத்தம்பி ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக அ.அற்புதஅருந்தவராசா, வா. கந்தப்பு, ச.இராஜகோபால், க.இராஜகுமார், சி.குலேந்திரன், க.ஜெயராசா, ச.இராஜரத்தினம், பொ.சபாரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-4)

# சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா

வட இலங்கை சங்கீதசபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் ஆகிய திருமதி அ.வேதநாயகம் தலைமையில்நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாசி உரையும் ஈழ நல்லூர் பி.ரஜீந்திரன், கோண்டாவில் சிவதாஸ் குழுவினரின் மங்கள இசையைத் தொடர்ந்து சற்குரு தியாகராஜ சுவாமிகளின் பூஜை வழிபாடும் சகல கலைஞர்களும் வழங்கும் பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலியும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் ஆகியோரின் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்குட்பட்ட சித்திர, சங்கீத பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 9 மணியளவில் ஆசிரியர் வள நிலையத்தில் இடம்பெறவுள்ளதால் சித்திர, சங்கீத பாட ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-7)




# சமூக அரங்கின் ஊடாக சமூகப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

சொல்வேந்தர் பொன். சுகந்தனால் ஆரம்பிக்கப்பட்ட சமூக அரங்கின் மூலம் பல்வேறு சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட நிகழ்வில், சமூக அரங்கின் ஊடாக கால்கள் ஊனமுற்ற நலிவுற்றவர்க்கு உதவிகள் வழங்கப்பட்டது, அதே போன்று கடந்த 14ஆம் திகதி நெல்லியடி முருகன் மண்டபத்திலே நடைபெற்ற சமூக அரங்க நிகழ்வில் சமூக அரங்கின் ஊடாக நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், செல்லமுத்துப் புடவை மாளிகை உரிமையாளரும் கால்கள் ஊனமற்ற சிறாருக்கு உதவிகள் வழங்கினார்கள்.

கடந்த காலங்களிலும் கனடா ஒட்டாவா பல்கலைக்கழகம் சமூக அரங்கின் ஊடாக கால்கள் ஊனமுற்ற ஏழைச் சிறுவர்களுக்கு உதவியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு போரூட் நிறுவனத்தால் உதவி

(யாழ்ப்பாணம்)

போரூட் நிறுவனத்தால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து கொடிகாமம், திருநகர், கோப்பாய் ஆகிய அகதிமுகாம்களில் வசிக்கும் மக்களுக்கு 4 இலட்சத்து 10 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இம் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சமையல் பாத்திரங்கள், உடுபுடவைகள், சவர்க்காரங்கள், மருந்துப் பொருட்கள், சிறுவர்களுக்கான பால்மா உள்ளிட்ட பொருட்களை வழங்கியுள்ளளதாக போரூட் நிறுவன முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

# கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.58க்கு நடைபெறவுள்ளது. (ஓ-29)

# மணிவிழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் செ.சிவநடராசாவின் மணிவிழாவும் 'நடராஜா சன்மார்க்கம்' நூல் வெளியீடும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அருகாமையில் உள்ள முத்தமிழ் கலாசார மண்டபத்தில் அப் பாடசாலை அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ க.சபாபதி சர்மா வழங்குவதுடன் தொடர்ந்து வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

மலர் வெளி யீட்டுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவார். (ஓ-4)

# காலைநேர மின்வெட்டு காலதாமதத்தை ஏற்படுத்துகிறது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில், கொக்குவில், பொற்பதி பகுதிகளில் இரவு நேர மின்வெட்டுக்கு மேலதிகமாக காலை நேரத்திலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இதனால் பாடசாலை, அலுவலகங்களுக்கு செல்லத் தயாராவோர் மற்றும் காலைநேர கணனி வகுப்புக்கள், உணவுத் தயாரிப்பு போன்றன பாதிக்கப்படுகின்றன.

எனவே இம் மின் வெட்டை நிறுத்தியோ அல்லது மாற்றியமைத்தோ பொது மக்களின் வாழ்க்கை முறைக்கு உதவுமாறு கோரிக்கை விடப்படுகின்றது. (ஓ-36)

# மின்சாரம் இன்மையால் மக்கள் அசௌகரியம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு அம்பிகை நகர் கிராமத்தில் மின்சார வசதியின்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கல்வி கற்கும் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-72)

# கைலாசவாகன வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு திருவருள் மிகு ஸ்ரீ காயாரோகண சுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (தைப்பூசத் திருநாளன்று) காலை 10 மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கைலாச வாகனத்தின் வெள்ளோட்ட விழா நடைபெறவுள்ளது.

மாலை 4 மணியளவில் விநாயகப் பெருமான், சுப்பிரமணிய சுவாமி சகிதம் ஸ்ரீ காயாரோகண சுவாமி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கைலாசவாகனத்தில் எழுந்தருளி திருவீதியுலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும்.

திருநெல்வேலி ஸ்தபதி கருணாகரன் செல்வவாணர் குழுவினர் இப் புதிய கைலாச வாகனத்தை நிர்மாணித்துள்ளார்கள். (ஓ)

# மோட்டார் சைக்கிள் -வான் விபத்தில் இருவர் படுகாயம்

மந்துவில் சந்திக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளும் வானும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இருவர் படுகாயமடைந்து நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருகையில் மந்துவிலில் உள்ள திருமண வீட்டிற்கு புகைப்படம் பிடிக்க காலை 6.30 மணியளவில் இருவர் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை மந்துவில் சந்திக்கு அருகாமையில் உள்ள வீதியில் வானுடன் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.


இதில் இருபாலையைச் சேர்ந்த ஆர்.ரமேஸ்குமார் வயது 30, பருத்தித்துறை வீதி நல்லூரைச் சேர்ந்த வ.நரேந்திரராசா வயது 36 என்பவர்களே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-7)

# ஆட்டோ மோதி குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில மேற்கில் வீதியோரமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்தவர் மீது நேற்றுக் காலை ஆட்டோ மோதி குடும்பஸ்தர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செ.பாஸ்கரன் (வயது 47) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார். (ஓ-7)






பாடசாலைகளில் தற்போது மிக முக்கியமாக அனர்த்த முகாமைத்துவக் கல்வி, சுற்றாடல், விஞ்ஞானம், உடற்கல்வி, குடியுரிமைக்கல்வி, வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடங்களினூடாக மாணவர்களுக்கு பிரயோகிக்கப்படுகிறது. இவ் வகையில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் அதிபர் எஸ். சிவநாதன் தலைமையில் வளவாளர்களான பா.தனபாலன், த.சிவகுமார் ஆகியோர் ஆசிரியர்- மாணவர்களுக்கு அண்மையில் அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடத்துவதைப் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 63

### இள மக்களும் தமிழ் மக்களும்

தமிழ் மக்கள் பிறஇனக் குழுக்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டனர் என்பதைத் தற்போது கிடைத்துள்ள சான்று கொண்டு கூறமுடியாது. அக்காலத்தில் மொழி மட்டும் இனக் குழுக்களை வேறுபடுத்தும் பண்பாக அமைந்தது என்று கூறமுடியாது. அதாவது, தமெட/ தமிழர் என்ற இனக் குழுவில் தமிழ் பேசியோர் அனைவரும் அடங்கினர் என்று கூறமுடியாது. எடுத்துக் காட்டாக, பரதர் எனப்படுவோர் தமிழ் நாட் டிலும் இலங்கையிலும் வேறு குழுவாகக் குறிப்பிடப்படுவர். இவர்கள் தமிழைத் தம் மொழியாகப் பேசியிருப்பர் என்றே தோன் றுகிறது.

ஆனால் பரதர் என்போர் தமிழர் என்ற குழுவில் அடங்கினரா அல்லது வேறு குழுவாகக் கருதப்பட்டனரா என்பதை நிறுவுவது கடினமாகும். இவ்வாறே தமிழ் நாட்டில் நாகர் என்ற பெயருடன் காணப்படுவோர் வேறு குழுவினரா அல்லது தமிழர் என்ற குழுவில் அடங்கினரா என்பதை அறிந்துகொள்வது கடினம்.

இலங்கையில் ஆதிவரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த தமெட/ தமிழ் இனக்குழுவினரை இலங்கையைப் பொறுத்தமட்டில் அன்னியர் என்று கருதும் கண்ணோட்டம் அறிஞர் மத்தியில் இருந்து வந்துள்ளது. பிற்பட்ட காலத்தில் தமிழ் அரசுகள் தென்னிந்தியாவிலும் சிங்கள அரசு இலங்கையிலும் இருந்த காரணத்தாலும் தற்கால அரசியல் எல்லைகளின் அடிப்படையிலும் இக் கண்ணோட்டம் உருவாகியது எனலாம். ஆனால் ,ஆதி வரலாற்றுக் காலத்தில் முன்னர் கூறியது போல இன்றைய அரச எல்லைகள் இருக்கவில்லை.

தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரு பொதுப் பிரதேசமாக விளங்கியது. இப் பொதுப் பிரதேசததில் பல்வேறு இனக் குழுக்கள் தங்கு தடையின்றி அங்குமிங்குமாக நடமாடினர். தென்னிந்தியாவில் தமிழர் மட்டுமன்றி இளமக்களும் வாழ்ந்தனர். இலங்கையில் இள மக்கள் மட்டுமின்றி தமிழ் மக்களும் வாழ்ந்தனர். இத்தகைய பின்னணியில் இப் பிராந்தியத்தில் எழுச்சி பெற்றிருந்த பல்வேறு குறுநில அரசுகளின் தலைவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கப் போர்களில் ஈடுபட்டனர்.

தென்னிந்தியக் குறுநில அரசுகளின் தலைவர்கள் அனுராதபுரத்துக் குறுநில அரசைத் தாக்கினர். ரோஹணத்தில் (தெற்கு இலங்கையில்) இருந்த குறுநிலத் தலைவர்களும், அனுராதபுரத்தையும் பிற குறுநில அரசுகளையும் தாக்கினர். அவ்வாறே அனுராதபுரத்திலிருந்தும் பிற இலங்கைக் குறுநில அரசுகளிலிருந்தும் தமிழ்நாட்டு குறுநில அரசுகள் தாக்கப்பட்டிருக்கலாம்.

சுருங்கக்கூறின், தமிழ்த் தலைவர்கள் பிற தமிழ்த் தலைவர்களுடன் போராடினர்; இள (சிங்கள)த் தலைவர்கள் பிற இளத் தலைவர்களுடன் எதிர்த்துப் போராடினர். அதுமட்டுமன்றி, இளத் தலைவர்கள் பிற இளத் தலைவர்களுக்கு எதிராகத் தமிழ்த் தலைவர்களுடைய உதவியை நாடினர். உண்மையில், அக்காலத்துச் சூழ்நிலையில் நிலத்துக்கும், ஆதிக்கத்துக்கும் இவர்கள் போராடிய போது, தமையனும் தம்பியும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடுவதையே காணலாம். ஆகவே இப் பின்னணியில் தமிழர் அன்னியர் என்றும், அவர்களைச் சிங்களத் தலைவர்கள் எதிர்த்துப் போராடியது சிங்கள மக்களை விடுவிப்பதற்கு என்றும் இப்போர்களுக்கு விளக்கம் கொடுப்பது தவறாகும்.

### தமிழ் மக்கள் அன்னியரல்லர்

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் பொ.ஆ.மு.நூற்றாண்டுகளில் இலங்கையில் இருந்த தமிழரை அன்னியர் எனக் கருதுவது தவறாகும். கவலைக்குரிய வகையில் பக்கச் சார்பின்றி எழுதும் அறிஞர்கள் கூட இத் தமிழரை அன்னியர் எனக் கருதியுள்ளனர். இலங்கையின் மிகப் பழைய பாளி வரலாற்றேடாகிய தீபவங்ஸ நூல் அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய முதல் தமிழ் மன்னர்களாகக் கருதப்படும் ஸேன, குத்தக ஆகிய இரு சகோதரர்களை வெளியிலிருந்து படையெடுத்து வந்தவர்களாகக் குறிப்பிடப்படவில்லை. அப்படி இருந்தும் இன்றைய வரலாற்றாசிரியர்கள் இம் மன்னர்களைத் தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளராகக் குறிப்பிட்டுள்ளனர். இது சான்றினை நோக்காது, தமிழர் என்ற காரணத்தினால் வரலாற்றாசிரியர்கள் கொண்டுள்ள தப்பெண்ணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில், தமிழ் மக்கள் பற்றிக் கிடைக்கும் மிகப் பழைய எழுத்து மூலாதாரங்கள் பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்களாகும். எனினும் அதற்கு முன் அவர்கள் இலங்கையில் இருந்திருக்கக் கூடும் என்று கொள்ளத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. அத்துடன், பொ.ஆ.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே , தமிழ் பேசுவோர் பரவலாகத் தமிழ் நாட்டிலும் மற்றும் அயல் இடங்களிலும் இருந்தனர் என்றுகொள்ள இடமுண்டு எனக் கொண்டால் (முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது), இலங்கைக்கும் அதே காலமளவில் அவர்கள் வந்திருக்கலாம் என்று கூறலாம். தமிழ் பேசுவோர் மட்டுமின்றி வேறு திராவிட மொழிகளைப் பேசுவோரும் அங்கு இருந்திருக்கலாம்.

### தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் புதிய இனக்குழுக்கள்

இதுவரை கூறியவற்றிலிருந்து தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் இன்று காணப்படும் பிரதான இனக்குழுக்கள் ஆக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு. ஆயிரத்திற்குச் சிறிது பின்னராக (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்), அதாவது ஆதி இரும்புக் காலம் உதயமாகிய போது தொடங்கியது எனலாம். இரும்புக் காலப் பண்பாட்டின்

பேராசிரியர்
கா. இந்திரபாலா

வருகையும் சமஸ்கிருத மயமாக்கத்தின் பரம்பலும் புதிய இனக்குழுக்கள் உருவாகுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தின. தூரவர்த்தகம், குறிப்பாக மேற்கு ஆசிய வணிகர்களுடைய வருகை, நகரமயமாக்கம் நடைபெறுவதற்கும் எழுத்தைப் பயன்படுத்தும் பண்பாடொன்று வளர்வதற்கும் மேலும் ஓர் உந்து சக்தியாக அமைந்தது. (தொடரும்)



சங்கானைக் கல்விக் கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு விழாவில் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு தலைமையில் ஊர்வலம் ஆரம்பமாவதைப் படத்தில் காணலாம். (படம்:-கோபி)



அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழாவில் அதிபர் அ.அருந்தவநேசன், சேவைக்கால யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி வை. இராமநாதன், கு.ஜெயராமக் குருக்கள் மற்றும் தரம் 1, தரம் 2 மாணவர்கள்,ஆசிரியர்களைப் படத்தில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 2

கல்லடி வேலனால் வெளியிடப்பட்டு வந்த "சுதேசநாட்டியம் " பத்திரிகையானது தனிநபரால் நடாத்தப்பட்டு வந்தவொரு பத்திரிகையாக இருந்ததுடன், யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருந்து வந்துள்ளது.

மேலும், இப்பத்திரிகையானது கல்லடி வேலனால் 1902 ஆம் ஆண்டு தொடக்கப்பட்டு, அவர் இறந்த பின்னரும் சிறிது காலமாவது (1947 ஆம் ஆண்டு வரையும்) வெளியிடப்பட்டுள்ளது.

"சுதேச நாட்டியம் " பத்திரிகையானது 45 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தமையானது , யாழ்ப்பாணத்தின் தமிழ்ப் பத்திரிகைத் துறை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனை என மதிப்பிடக் கூடியதாகும்.

அவ்வாறான போதிலும் , யாழ்ப்பாணத்தின் பத்திரிகைகள் பற்றி ஆராய்ந்தவர்கள் , "சுதேச நாட்டியம் " பத்திரிகையில் வந்த விடயங்களைக் கவனிக்கத் தவறியுள்ளனர். அப்பத்திரிகை பற்றியோ , கல்லடி வேலன் பற்றியோ ஆய்வுக்கட்டுரை ஏதேனும் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

'*கல்லடி வேலன்*' எனப் பொதுவாக அழைக்கப்பட்ட கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை, வயாவிளான் என்னுமிடத்தைச் சேர்ந்தவர். இவர் '*ஆசுகவி*' எனவும் அறியப்பட்டிருந்தார்.

நினைத்தவுடன் கவிபாடும் வல்லமை கொண்டமை காரணமாகவே '*ஆசுகவி*' என அழைக்கப்பட்டார். இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்டவர்களால் அவருடைய சிலேடைத்தனமான நடவடிக்கைகள் சுவையுடன் பேசப்படுவதையும் கேட்டுளேன். எழுதிய சில கவிதைகளை நான் வாய்மொழியாகக் கேட்டிருந்தேன்.

கல்லடிவேலன் '*அழகம்மா கும்மி*' , '*இர கசிய நூல்*' ஆகிய நூல்களையும் , '*யாழ்ப்பாண வைபவ கௌமுதி*' (1921) என்ற வரலாற்று நூலையும் வெளியிட்டிருந்தார். முன்னைய இரு நூல்களும் கிடைப்பதற்கு அரியனவாயுள்ளன.

இவைகளைவிட, உறுதியாக நிரூபணமாகாத, அல்லது எழுதியவர் பற்றிய விபரங்களற்ற வகையில் யாழ்ப்பாணத்தில் வெளியி டப்பட்டுள்ள, பல நூல்களுள், சிலவற்றையும் இவர்தான் இயற்றியிருந்தார் எனக் கருதப்படுகிறது. இவரது பத்திரிகையில் வெளிவந்தவைகளும், இவரது நூல் களும், இவர் நீதி விசாரணைகளை எதிர்கொள்ளவும், தண்டப்பணம் செலுத்தவும், சிறைத் தண்டனை பெறவும், ஏதுவாக அமைந்த காரணத்தினால், அவரது நூல்கள் இயற்றியவரது பெயர் குறிப்பிடப்படாது அல்லது வேறு பெயர்களில் வெளியிடப் பட்டிருக்கக்கூடும்.

### *பகுதி 2*

### யாழ்ப்பாணத்தில் அச்சுக்கலையின் அறிமுகமும் பத்திரிகைகளின் பெருக்கமும்

அச்சுகலையின் அடிப்படை பிரதியெடுத்தலாகும்.அதன் தொடக்கத்தினை இந்திய மொகெஞ்தாரோ - ஹரப்பா நாகரிக கால முத்திரைகளுடன் தொடர்பு படுத்தி நோக்குவர். (Priolkar,1958:1) பிரதியெடுக்கும் கலை முதலில் வளர்ந்த நாடு சீனாவாகும். கி.பி. 105 இல் சீனாவில் காகிதம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. கி.பி.முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சீனர்கள் மரப்படிமங்களில் எழுத்துக்களையும் தெய்வப்படங்களையும் செதுக்கியமையைக் கொண்டு காகிதத்தில் பிரதி எடுக்கும் நிலையை அடைந்து விட்டனர்.

இதனை விட களிமண், மரம் போன்றவற்றில் அச்சுக்களை உருவாக்கியும் பயன்படுத்தியுமிருந்தனர்.

சீனர்கள் அறிந்த காகிதத் தொழில்நுட்பம் கி.பி. 12.இல் அராபியர் வாயிலாக ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது (Priolkar,1958:1)

ஜொகான் குட்டன்பேர்க் 1445 இல் முதன் முதலாக பைபிளின் பாகத்தை மிருகத் தோலில் அச்சிட்டு நிறைவேற்றியமையானது நவீன அச்சுக்கலையின் ஆரம்பத்தில் ஒரு முக்கியமான சகாப்தத்தினை ஆரம்பித்திருந்தது.

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

(Priolkar,1958:1) ஐரோப்பாவில் அச்சுக்கலையின் அறிமுகம் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிவகுத்தது. அச்சுக்கலை அறிவை வளர்ப்பதிலும், கருத்துக்களைப் பரப்புவதிலும், வாசிக்கக் கூடியவர்களின் சிந்தனையைத் தூண்டுவதிலும், அபிப்பிரயங்களை ஏற்படுத்துவதிலும், ஆற்றக்கூடிய பங்களிப்பு எவரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதே. (தொடரும்)

# இலங்கையில் போர் நிறுத்தம் கோரி சென்னையில் பெப்.10இல் பொதுக்கூட்டம்

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் சென்னையில் எதிர்வரும் 10ஆம் திகதி பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

அந்த இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அதன் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் போரை நிறுத்தக் கோரி எங்கள் அமைப்பின் சார்பில் தமிழகத்தில் புதன்கிழமை நடைபெற்ற கடையடைப்புப் போராட்டம் முழு வெற்றி பெற்றது.

பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்காக நமது உணர்வுகளை வெளிப்படுத்துவது ஜனநாயக ரீதியிலான உரிமை. இதனை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. ஆனால் அதன் பிறகும் கூட மிக அமைதியாக, ஜனநாயக நெறிகளுக்கு உட்பட்டு, போராடிய எங்கள் அமைப்பினர் பலர் மீது காவல்துறை அடக்குமுறையை ஏவியுள்ளது.

சட்டப்பேரவை உறுப்பினர் உட்பட ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு எங்கள் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரியும், எங்கள் அமைப்பின் நோக்கங்களை விளக்கியும் எதிர்வரும் 10 ஆம் திகதி சென்னையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும் இதுபோன்ற பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும்.

போர் நிறுத்தம் ஏற்படாவிட்டால் தமிழக எம்.பி.க்கள் ராஜிநாமா செய்வது என்ற தீர்மானத்தை அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் கருணாநிதிதான் முன்மொழிந்தார்.

அது போல் சட்டப்பேரவையில் தீர்மானம், மனிதச் சங்கிலி, டில்லி பயணம் என அவர் மேற்கொண்ட எல்லா முயற்சிகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருந்தோம்.

அதன் பிறகும் போர் நிறுத்தம் ஏற்படவில்லை. எனவே அடுத்தகட்ட நடவடிக்கைகளை முதல்வர் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர் எதுவும் செய்யவில்லை.

எனவேதான் நாங்கள் இந்த அமைப்பை ஏற்படுத்தினோம். எங்கள் அமைப்பின் கூட்டத்துக்கு முதல்வர் உள்ளிட்ட அனைத்து தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பினோம். ஆனால் நாங்கள் அழைக்கவில்லை என முதல்வர் கூறுவதில் உண்மையில்லை என்றார் பழ. நெடுமாறன்.



பேட்டியின் போது இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த ச. ராமதாஸ், வைகோ, ஆர் நல்லகண்ணு, தொல் திருமாவளவன், தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். (ஓ-6)

## பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்

### இளைஞரணிக்கு ஸ்டாலின் வேண்டுகோள்

இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை நடத்தும் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் இளைஞர் அணியினர் பெருந் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என தி.மு.க இளைஞர் அணி செயலர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்த செயற் குழுக் கூட்டத்தில் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதியை நிலை நாட்டவும் இலங்கைத் தமிழர்வாழ்வுரிமையைப் பெற்றுத்தரவும் ஜனநாயக முறையில் தீர்வு காணவும்வலியுறுத்தி இன்று முதல் மூன்று தினங்களுக்கு இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை என்ற அமைப்பின் பெயரால் மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் இளைஞர்அணியினர்பெருந்திரளாககலந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)

## முத்துக்குமாரின் மரணத்தை கொச்சைப்படுத்தும் சுப்பிரமணிய சுவாமியை கைது செய்ய வேண்டும்

### தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் தலைவர்

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி தனது உயிரை மாய்த்து கொண்ட முத்துக்குமார் மரணத்தை சுப்பிரமணியசாமி கொச்சைப்படுத்தி பேசுகிறார். இது மன்னிக்க முடியாத குற்றம் ஆகும். அவரை வன்மையாக கண்டிக்கிறேன். வதந்தியை பரப்புவதாக சுப்பிரமணிய சாமியை கைது செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் வெள்ளையன் கூறியுள்ளார்.

கடலூரில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது ,

இலங்கைத் தமிழர்களை பாதுகாக்க வேண்டும். அதற்கு நிரந்தரமாக போர் நிறுத்தம் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக நேற்று முன்தினம் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் பொதுவேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை ஏற்று வியாபாரிகள் முழு கடை அடைப்பு செய்தனர். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலைவர்கள் அரசியல் இலாப நஷ்டம் பாராமல் ஓரணியில் நிற்க வேண்டும். இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் தி.மு.க., காங்கிரஸ் கட்சியினரும் சேர வேண்டும். இதில் அரசியல் பார்க்கக் கூடாது. அரசியல் வேறு. இலங்கை தமிழர் பிரச்சினை வேறு என்பதை அனைவரும் உணர்ந்து ஒன்று சேர வேண்டும்.

இலங்கை பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதாக அமையும். தமிழர்கள் தான் தேசிய ஒருமைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும். மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டாம் என்பது அல்ல. தேசிய ஒருமைப்பாடு என்பது ஒரு வழிபாதை அல்ல என்றார். (ஓ-6)

## இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படாதது ஏன்? — கருணாநிதி விளக்கம் அளிக்க வேண்டும் —

### பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் கோரிக்கை



இலங்கையில் ஏன் போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பது குறித்து முதல்வர் கருணாநிதி தமிழக மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,


இலங்கையில் போரை நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசு சார்பிலும், தமிழக அனைத்துக் கட்சிகள் சார்பிலும் ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதன் பிறகும் அங்கு போர் நிறுத்தம் ஏற்படவில்லை.

இதுவரை அங்கு போர் நிறுத்தம் ஏற்படாததற்கு என்ன காரணம் என்பதை கருணாநிதி விளக்க வேண்டும். தி.மு.க. தலைவர் என்ற முறையில் இல்லாமல், மாநிலத்தின் முதல்வர் என்ற தலைமையில் அவரிடம் இருந்து இதற்கான விளக்கத்தை தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.


மத்திய ஆட்சியில் பங்கு பெற்றுள்ள கட்சி என்ற முறையில் போரை நிறுத்துவதற்காக பல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டோம். பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரிடம் நேரிலும், கடிதம் வாயிலாகவும் வலியுறுத்தினோம். மேலும் தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் துணையாக நின்றோம்.

போரை நிறுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான முன் முயற்சியை கருணாநிதி எடுக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தினோம். 7 கோடி தமிழர்களுக்கு முதல்வர் என்ற முறையிலேயே அவரை முன்னுறுத்தி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கூறினோம்.

ஆனால் மத்திய அரசுக்கும், தி.மு.க.வுக்கும் இடையே விரோதத்தை உண்டாக்கவும், அதன் மூலம் மத்தியில் நான் செல்வாக்கு செலுத்த முயன்றதாகவும் கருணாநிதி கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.



மேலும் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க சதி எனவும் குற்றஞ் சாட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 35 சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஆதரவு உள்ள நிலையில் ஆட்சியைக் கலைக்க எவ்வாறு சதி செய்ய முடியும் என்பதையும் கருணாநிதி தான் விளக்க வேண்டும் என்றார் ராமதாஸ் (ஓ-6)




## இலங்கைப் பிரச்சினை குறித்து இன்று கறுப்புக் கொடி பேரணி

(திருநெல்வேலி)

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து, திருநெல்வேலியில் இன்று சனிக்கிழமை ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் கறுப்புக் கொடி பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடைபெறவுள்ளன.

மாநகர ம.தி.மு.க அலுவலகத்தில் நடைபெற்ற இப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் குறித்த கூட்டம் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஆர். சண்முகவேல் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து இன்று சனிக்கிழமை மாலை மாநகரில் பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடத்துவது என்றும் அதில் ஏராளமானோரைப் பங்கேற்கச் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலர் செல்லையா பாண்டியன், தமிழர் ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தமிழ்த்தனயன், ம.தி.மு.க. மாநகர் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.என். சுப்பையா, தமிழர் களம் அமைப்பாளர் மைபா, தமிழ்ச் சான்றோர் பேரவை நிர்வாகி தமிழன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஓ-6)

## தடைபற்றி பயப்பட மாட்டேன் நடிகை நயன்தாரா பேட்டி

(சென்னை)

"எனக்கு நஷ்ட ஈடு கொடுத்தால் தான், அட்வான்ஸ்' பணத்தை திருப்பி கொடுப்பேன். தடை பற்றி பயப்பட மாட்டேன்" என்று நடிகை நயன்தாரா கூறினார்.

நயன்தாரா இப்போது, 'பாடி கார்ட்' என்ற மலையாள படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அந்த படத்தின் படப்பிடிப்பு கேரள மாநிலம் கோட்டயத்தில் நடைபெறுகிறது.

தமிழ் படங்களில் நடிக்க தடை விதிக்கப்பட்டிருப்பது பற்றி நயன்தாராவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது,

'பையா படத்துக்காக' 'அட்வான்ஸ்' பணம் வாங்கியது உண்மை. அதை திருப்பி கொடுக்க மாட்டேன் என்று சொன்னதும் உண்மை. அந்த படத்துக்காக, நான் மூன்று மாதங்கள் காத்திருந்தேன். எந்த படத்திலும் வேலை செய்யவில்லை. 90 நாட்களில், நான் இரண்டு படங்களை முடித்து இருப்பேன்.

அப்படி நடிக்காததால், எனக்கு 2 படங்களுக்குரிய சம்பளத்தை இழந்து விட்டேன்.

இந்த நிலையில், திடீரென்று சம்பளத்தை குறைத்தால் தான் படப்பிடிப்பை தொடங்குவோம் என்று நிபந்தனை விதித்தார்கள். சம்பளத்தை குறைக்கும்படி கேட்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அப்படி கேட்பதற்கு ஒரு விதம் இருக்கிறது. மிரட்டல் பாணியில் கேட்டதால், நான் சம்பளத்தை குறைக்க சம்மதிக்கவில்லை.


'பையா' படத்தில் நடிப்பதற்காக, நான் வேறு எந்தப் படத்தையும் ஒப்புக்கெள்ளாமல் மூன்று மாதங்கள் சும்மா இருந்ததற்கு, நஷ்ட ஈடு யார் கொடுப்பார்கள்? என் பக்கம் நியாயத்தை பேசுவதற்கு யாரும் இல்லை. என் தரப்பு நியாயத்தை விளக்கி, நடிகர் சங்கத்தில் அதிகாரப் பூர்வமாக கடிதம் கொடுத்து இருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் நடிகர் சங்கமும் தயாரிப்பாளர்கள் சங்கமும் இது வரை என்னை அழைத்து விசாரிக்கவில்லை. அவர்கள் அழைத்தால், என் தரப்பு நியாயத்தை முறைப்படி தெரிவிப்பேன், என்றார். (ஓ-6)

# உலகிலேயே மிகப் பெரிய ஆதிகால பாம்பின் எச்சங்கள் கண்டுபிடிப்பு

உலகின் மிகப் பெரிய பாம்பின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கனடிய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

றொரன்டோ பல்கலைக்கழகத்தின் தலைவர் ஜேஸன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள், 'நேச்சர்' விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன. திதானோ போவா என்ற இந்தப் பாம்பானது 42 அடி நீளமுள்ளதெனவும் அது வட கிழக்கு கொலம்பியாவிலுள்ள மலைக் காடுகளில் 58-60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



மேலும் இதன் நிறை 1140 கிலோகிராம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அனக்கொண்டாவை ஒத்த இந்த பாம்பு இனமானது, தனது பெருமளவு நேரத்தை நீரினுள் கழித்து வந்ததாகவும் அப்பாம்பு தனது இரையாக முதலைகளையும் பெரிய மீன்களையும் உண்டு வந்ததாக நம்பப்படுவதாகவும் ஜேஸன் கூறினார். (ஓ-6)

## தலிபான்களை எதிர்ப்பதற்காக

# இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான்களை ஒழிப்பதற்காக இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்குவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ஈராக்கில் விழிப்புணர்வு குழுக்களை அமைத்து அதில் சேர்ந்தவர்களுக்கு ஆயுதம் கொடுத்து தீவிரவாதிகளை எதிர்த்து போராடச் செய்தது போல ஆப்கானிஸ்தானிலும் இளைஞர்களுக்கு ஆயுதம் கொடுத்து அவர்களை தலிபான்களை எதிர்த்து போராடச் செய்யவும் அது திட்டமிட்டுள்ளது.

இந்த தகவலை ஆப்கானிஸ்தான் உள்துறை மந்திரி முகமது உசேனிபாகிமி தெரிவித்தார்.

இதற்காக ஆப்கானிஸ்தான் பொது மக்கள் பாதுகாப்பு படை உருவாக்கப்பட இருக்கிறது.

இதில் சேர்பவர்களுக்கு தானியங்கி துப்பாக்கிகள் வழங்கப்படும். இதற்கான செலவுகள் அனைத்தையும் அமெரிக்கா ஏற்றுக் கொண்டு உள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஓ-6)

# ஜெர்மனி வாழ் தமிழ் மக்களால் மாபெரும் கண்டனப் பேரணி

## 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

(பேர்லின்)

ஜெர்மனியின் தலைநகர் பேர்லினில் மாபெரும் கவனயீர்ப்பு கண்டனப் பேரணி தமிழ் மக்களால் நடத்தப்பட்டுள்ளது. இதில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசு மேற்கொண்டு வரும் தமிழினப் படுகொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் சிக்கியிருக்கும் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் கிடைக்க ஜெர்மனிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி தலைநகர் பேர்லினில் இக்கண்டனப் பேரணி நடைபெற்றது.

பேர்லினில் பெரு மளவு வெளிநாட்டு தூதரகங்கள் அமைந்துள்ள ஜெர்மனி ஆளும் கட்சியின் பணியகத்தின் முன்பாக கடந்த புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் தமிழ் மக்கள் கூடத் தொடங்கினர்.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் இனப்படுகொலைகளை விளக்கும் படங்கள், பதாதைகள் மற்றும் சிவப்பு - மஞ்சள் கொடிகளை தாங்கியவாறும் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கி வரும் இராணுவ உதவிகளை நிறுத்தக்கோரும் பதாதைகளை தாங்கியவாறும் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடிய தமிழ் மக்கள் பிற்பகல் 1 மணியளவில் ஜெர்மனிய நாடளு மன்றம் நோக்கி பேரணியாக புறப்பட்டனர்.

முதலில் நோர்வே மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கான மனுக்களை நோர்வே தூதரகத்தில் கையளித்து விட்டு பேரணியாக இந்தியத் தூதரகம் நோக்கி நகர்ந்து சென்றனர்.

இந்தியத் தூதரகம் முன்பாக சிறிது நேரம் நின்ற மக்கள் இந்திய தூதுவரிடமும் மனுவொன்றை கையளித்து விட்டு நகர்ந்தனர்.

நகரின் மத்தியில் அமைந்த பிரதான வீதி ஊடாக நகர்ந்த பேரணி, ஜெர்மனி நாடாளு மன்றத்திற்கு அருகில் இருந்த மைதானத்தை சென்றடைந்தது.

மக்கள் போரணியாக முழக்கங்களை எழுப்பிய வண்ணம் நிற்க ஜெர்மனிய அரசு தலைவருக்கான மனு அவரின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

இப்பேரணிக்கு ஜெர்மனியின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கும் அதிகமான பேருந்துகளில் வந்து 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## உலக தரிசனம்

# அமெரிக்காவில் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த சுதிர்குமார் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் உள்ள நிறுவனத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றிவந்த ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சுதிர்குமார் அடையாளம் தெரியாத நபர்களால் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த எட்டு பேர் அங்கு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருப்பது அங்குள்ள இந்தியர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

# மும்பைத் தாக்குதல் சம்பவங்களில் பங்களாதேஷ் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு

## பாகிஸ்தான் நாளிதழ் தகவல்

(இஸ்லாமாபாத்)

மும்பையில் நடைபெற்ற தாக்குதல் சம்வங்களில் பங்களாதேஷ் பயங்ரவாத அமைப்புக்குத் தொடர்பு உள்ளதாக நம்பகமான தகவல்களை மேற்கோள்காட்டி பாகிஸ்தான் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்ாக வியாழக்கிழமை வெளியான டான் நாளிதழில் கூறப்பட்டுள்ளதாவது,

மும்பை தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்தியா அளித்துள்ள ஆதாரங்களைத் தொடர்ந்து பாகிஸ்தான் விசாரணை மேற்கொண்டது.

தெற்காசியாவில் ஒருங்கிணைந்து செயற் பட்டுவரும் முஸ்லீம் அடிப்படை வாத அமைப்புக்கு மும்பைத் தாக்குதலில் தொடர்பிருப்பது தெரியவருகிறது.

இதில் பங்களா தேஷை மையமாகக் கொண்ட ஹர்கத் - உல்- ஜிகாத்-அல் இஸ்லாமி என்ற பயங்கர வாத அமைப்பு தாக்குதல் திட்டத்தை வகுத்ததோடு, தாக்குதல் நடத்திய பயங்கர வாதிகளுக்கு பயிற்சியும் அளித்துள்ளது. அதற்கான ஆதாரங்களும் வலுவாக உள்ளன.

இந்த அமைப்பு தெற்காசியாவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் பல்வேறு பயங்கரவாத அமைப்புகளுடன் இணைந்த செயற்பட்டு வருவது தெரியவருகிறது. அல்-கொய்தாவின் ஆலோசனையும், ஆதரவும் இந்த அமைப்புக்கு உள்ளது தெரிவந்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலும் இந்த அமைப்பு செயற்பட்டு வருகிறது.

மும்மைப தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் மேற்கெண்ட விசாரணை தொடர்பான அறிக்கை விரைவில் வெளியிடப் படும் எனவும் இந்த வார இறுதிக்குள் ஆதாரங்களுடன் இந்தியாவிடம் அளிக்கப்படும் எனவும் அதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் ஈடுபட்டவர்களில் ஒருவராவது பங்களாதேஷை சேர்ந்தவர் என்பதை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்ட விசாரணை அதிகாரிகள் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

மும்பை தாக்குதல் தொடர்பான திட்டம் பாகிஸ்தானில் தீட்டப்படவில்லை என்று பிரிட்டனுக்கான பாகிஸ்தான் தூதர் வஜித் ஷம் சுல் ஹசன் அண்மையில் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு கூறியதற்கு பாகிஸ்தான் பிரதமரும், வெளியுறவு அமைச்சரும் கண்டித்திருந்தனர்.

எனவே தாக்குதல் தொடர்பான விசாரணை அப்போதே தொடங்கியிருப்பதும், விசாரணை முடிவுகளை அறிவிப்பதில் இரகசியம் காப்பது என்றும் பாகிஸ் தான் தீர்மானித்திருந்தது.

இந்நிலையில் தாக்குதல் தொடர்பான திட்டம் துபையில் தீட்டப்பட்டுள்ளதாகவும், இந்தியாவில் உள்ள சில சக்திகள் இதற்கு துணை போயுள்ளதாகவும் இத்தனை பெரிய தாக்குதலை இந்தியாவில் உஶ்ள சில சக்திகளின் ஆதரவு இல்லாமல் செய்திருக்க முடியாது என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக இரண்டு தொகுப்புகள் அடங்கிய கேள்விகளை இந்தியாவுக்கு பாகிஸ்தான் அளித்ததாகவும், அதில் ஒரு கேள்வி தொகுப்புக்கு மட்டும் இந்தியா பதில் தந்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதிகள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு மின்னஞ்சல் விவரங்கள் மற்றும் தொலைபேசி உரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் ஹர்கத் - உல்- ஜிகாத் அல் இஸ்லாமி என்ற பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பு இருப்பது ஊர்ஜிதமாகியுள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது. (ஓ-6)

# அசையாது, ஆனால் அசையும்



(நியூயோர்க்)

அமெரிக்காவின் வொயிட் பியர் லேக் பகுதியில் உள்ள ஏரி முழுவதும் இப்போது பனியில் உறைந்து மைதானமாகி விட்டது.

அங்கிருந்த 60 தொன் எடை கொண்ட இரண்டு மாடி வீட்டை அலேக்காக டிறொலியில் ஏற்றி மறுபக்கம் உள்ள மடோஸ்கா பூங்கா பகுதிக்கு இழுத்துச் செல்கின்றனர்.

இதற்காக 64 டயர்கள் பொருத்தப்பட்ட டிறொலி பயன்படுத்தப்பட்டது. பொதுவாக வீடு, நிலத்தை அசையா சொத்து என்கிறோம் நாம்.

இதைப் பார்க்கும்போது அசையாது, ஆனா அசையும் என்று சொல்லத் தோன்றுகிறது. (ஓ-6)

# அதிக எலியைக் கொன்றவருக்கு பரிசு

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த ஓராண்டில் மிக அதிகபட்சமாக முப்பத்தொன்பதாயிரத்து 650 எலிகளைக் கொன்றவருக்கு அரசு வெகுமதியுடன் கௌரவித்துள்ளது. பங்களா தேஷில் பயிர்களை எலிகள் நாசம் செய்வதால் அரசுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுதுடன் விவசாயிகளும் பட்டினியால் வாடினர்.

நாட்டின் தென்கிழக்கு நகரான சிட்ட காங்கில் உள்ள மலைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் பயிர்களை எலிகள் நாசம் செய்ததால் அங்கு உணவுப் பஞ்சமே ஏற்பட்டது.

இந்நிலையில் எலிகளை ஒழிக்க அரசு பொதுமக்களுக்கு பரிசுத்திட்டத்துடன் கூடிய எலி ஒழிப்புத் திட்டத்தை அறிவித்தது.

அதாவது அதிக எலிகளைக் கொன்று அதன் வால் பகுதியை மட்டும் வெட்டி சேகரித்து அரசிடம் காண்பித்தால் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதில் கடந்த ஓராண்டில் பினய் குமார் கர்மார்கர் (40) என்ற ஏழை விவசாயி 39ஆயிரத்து650 எலிகளைக் கொன்று சாதனை படைத்தார். அவருக்கு 14 அங்குல சொனி டி.வி. பரிசாக வழங்கப்பட்டது. (ஓ-6)

# இஸ்ரேல் தூதர் மீது சப்பாத்து வீச்சு

(ஜெருசலேம்)

சுவீடன் நாட்டுக்கான இஸ்ரேல் தூதர் பென்னி டேகன் மீது வியாழக்கிழமை சப்பாத்து மற்றும் புத்தகம் வீசப்பட்டதாக சுவீடன் நாட்டுப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

சுவீடன் ஸ்டாக்கோம் பல்கலைக்கழகத்தில் பென்னி டேகன் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு அமர்ந்திருந்த இருவர் திடீரென டேகன் மீது சப்பாத்து மற்றும் புத்தகத்தை ஆக்ரோஷமாக வீசினர்.

பாலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைக் கண்டித்து அந்த நபர்கள் தூதர் மீது சப்பாத்து வீசினர். இதில் ஒருவர் பெண் ஆவர் என்றும் அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 5-I



எம் இனிய உறவுகளே!
நீரும் நீங்களும் நலமா!

எமக்கிருக்கும் வளங்களுள் நீர் வளம் முதன்மையானது. நீர் இன்றி எதுவுமில்லை. நீர் தானே உலக ஓட்டத்தின் இயக்கம். மனித உடலிலும் அதன் செயற்பாட்டிலும் நீர் முக்கியமானது.நீரின்தேவை தற்போது பரந்து பட்ட அளவில் உணரத்தலைப்பட்டுள்ளது. பூமிப்பந்தின் 2/3 பகுதி நீர் தானே. ஆனாலும் குடிப்பதற்கு, நீர் பாய்ச்சுவதற்கென கிடைக்கக் கூடியளவு நீர் மிக மிக குறைவு. இன்னும் அருகிக் கொண்டு போகின்றது. இருக்கின்றநீரை தேவைக்கேற்ப சிக்கனமாகப் பயன்படுத்தத் தவறினால் குடிக்கும் தண்ணீருக்காக அலைய வேண்டிய காலம் வரப்போகின்றது. இப்படி எச்சரிக்கையும் வந்திருக்கின்றது.

### நிலத்தடி நீர்வளம்

குடி நீராயினும்,பயிருக்கு நீர் பாய்ச்சுவதாயினும் சரி நிலத்தடி நீர் வளத்திலேயே முற்று முழுதாக நாம் நம்பியிருக்க வேண் டியிருக்கின்றது. ஒரு புறத்தில் நிலத்தடி நீரில் குடிப்பதற்கு பயன்படுத்தக் கூடிய நீரின் அளவு குறைந்து கொண்டு செல்கின்றது. இன்னொரு புறத்தில் நிலத்தடி நீர் உவராகிக் கொண்டிருக்கின்றது. சுனாமியின் தாக்கத்தினால் நீர் உட்புகுந்த தனால் பல வயல் நிலங்கள், கிணறுகளெல்லாம் உவர் நீராகி விட்டன.

### மாசுபட்டிருக்கும் நிலத்தடி நீர்

சென்ற பசுமைப் புரட்சியின் தாக்கம் நிலத்தடி நீரில் இன்றும் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது. தாராளமாக பயன்படுத்தப்பட்ட அசேதன இரசாயனங்களான பீடை நாசினிகள் மற்றும் பசளைகள் அதிகளவில் வயல்களில் பயன்படுத்தப்பட்டதனால் பயிர்கள் உறுஞ்சியவை போக மீதி நீரில் கரைந்து நீர் நிலைகளான கிணறுகள், குளங்கள் என்பனவற்றில் செறிவாக்கப்பட்டுள்ளன.

இவ்வகையாக நச்சுத் தன்மையுடைய அசேதன இரசாயனங்கள் நிலத்தடி நீரில் குறிப்பாக குடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கிணறுகளில் நைதரேற்று நைதரசனாக வரையறுக்கப்பட்ட அளவிலும் பார்க்க மிதமிஞ்சிய அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மழையாக வந்த நன்னீர் மண்ணில் விழுந்து மனித செயற்பாட்டால் நஞ்சாகி விட்டது.

### மாசுபட்டுள்ள குடி நீர்

நாம் குடிக்கும் நீர் மாசுபடுத்தப்பட்டுள்ளது. நாமாகவே வரவழைத்த வலி இது. அதற்கு தீர்வு காண திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறோம். "சும்மா கிடங்கை சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்பது போல பசுமையில் புரட்சி செய்யப்போய், விளைச்சலை அதிகரிக்கிறோம் என வீறாப்பு பேசி இறுதியில் இலவசமாக கிடைக்கின்ற குடிநீரையும் நஞ்சாக்கி




விட்டிருக்கிறோம். தேவைக்கதிகமாக வேளாண் உள்ளீடுகளைப் பயன்படுத்தியதால் வந்த வினை இது.

அருமை பெருமையாகக் கிடைக்கின்ற குடிநீர் மாசுற்றிருப்பது இதனை பயன்படுத்துவோருக்கு பலவிதமான நோய்களை உருவாக்குகின்றது. அதிலும் புற்று நோயின் அதிகரிப்பிற்கு இவ்வாறான மாசுற்ற குடிநீரும் முழுமுதற் காரணம். யாழ்ப்பாணத்தில் புற்று நோய் அதிகரித்திருப்பதற்கு இப்படியும் ஒரு காரணம் கூறப்படுகின்றது. இன்னும் குடிநீரில் குளோரைட்டு, கல்சியம் போன்றவற்றுடன் வடமத்திய இலங்கையில் கட்மியமும் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### கல்சியத்தின் செறிவு

குடிநீரில் கல்சியத்தின் அளவு அதிகரிக்கப்படும் போது கல்சியம் சார்ந்து பலவிதமான நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாகி விடுகின்றது.


நாம் உண்ணும் உணவில், குடிக்கும் நீரில் கல்சியம் தேவையான அளவு இருக்க வேண்டும். ஆனால் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" அந்த கதைதான் இன்றும் இங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. மலை உடைந்து கல்லாகியது போய் கல்லீரலில் கல் என்றாகியிருக்கிறது.

பசுமைப் புரட்சியில் உணவுற்பத்திக்கு மட்டுமே முழுமையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆய்வுகள் எல்லாம் எப்படி உணவுற்பத்தியை அதிகரிக்கலாம் என மட்டுமே முடுக்கிவிடப்பட்டன. ஆனால் சூழலைப் பற்றி அதுவும் உயிர் வாழ அவசியம் தேவையான நீருக்கு, குடி நீருக்கு மனிதன் முக்கியத்துவம் கொடுக்கவேயில்லை.

இன்று குடிப்பதற்கான நீருக்காக அங்கலாய்த்துக் கொள்கின்றோம். போத்தல் தண்ணீருக்காக அலைய வேண்டி வந்து விட்டது. இலவசமாக ஏழை எளிய மக்களால் பயன்படுத்தப்பட்ட அத்தியாவசியப் பொருள் காசு கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உலக மக்கள் அனைவருடன் நாமும் இணைந்திருக்கிறோம்.

### புளோரைட்டு

ஒருவரது உடற் சுகாதாரத்தில் மிக முக்கியமானது. "வாய் சுகாதாரம்." இந்த வாயினால் தானேஎல்லாமும்.கண்டதைதிணிப்பதும்,அதனை அரைப்பதும்,,அவசரத்திற்கு அரை குறையாக விழுங்குவதும்உள்ளே ஜீரணமாகாது. வெளியே கக்குவதும் வாயிலேயே நடந்து முடிக்கின்றது.




இது போதாதென்று 'மள மள' வென கதைப்பதும், மற்றையவர் மீது வசைபாடு வதும், கோபம் வந்தால் கடிப்பதும் (நகத்தை) இப்படி பலவிதமான வேலைகள் நடைபெறும் தொழிற்சாலை இது. இடையி டையே இதற்கு ஓய்வு கொடுப்பதற்காக 'உண்ணா விரதம்' இருப்பதும் 'மௌன விரதம்' இருப்பதும் எங்களூர் மக்கள் சிலரின் பழக்க மாகி விட்டது.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இதில் வாயிலில் உள்ள பற்களின் உறுதிக்கு, புளோரைட்டு அவசியமானது. யாழ்ப்பாண குடாநாட்டைப் பொறுத்த வரையில் இதில் எதுவித பிரச்சனையும் இல்லை. தேவை யான அளவு புளோரைட்டு குடிநீரில் இருக்கின்றது.

ஆனால் மட்டக்களப்பு, அநுராதபுரம் இன்னும் தென் பகுதியில் மேலுள்ள நீரில் அதாவது தரை நீரில் புளோரைட்டு ஆனது தேவையான அளவிலும் பார்க்க அதிகமாக இருக்கின்றமை அறியப்பட்டுள்ளது. இதனால் 'புளோரியோசிசு' என்னும் நோய் மக்களிடையே ஏற்படுகின்றது. (தொடரும்)

# மிளகாயின் எதிரிகளுடன் ...

மிளகாயின் எதிரிகளான பீடைகள் மற்றும் நோய்களுடனான போராட்டம் என்பது எமக்கு பழக்கமான ஒன்றுதான். எங்கள் அப்பு ஆச்சி தொடக்கம் இன்று வரைக்கும் நடக்கிறது. போராட்ட வழி முறைகளை மாற்றினாலும் எதிரிகள் அழிந்த பாடில்லை. தற்போது மிளகாய் பயிரிடும்காலம் ஆரம்பமாகிவிட்டது. எனவே முற்கூட்டியே எதிரிகளைப் பற்றி அறிந்து வைத்திருப்பது சரியான நடவடிக்கைகளை எடுக்கவும் தேவையாற்ற இரசாயனப் பாவனையை தடுக்கவும் நலமாயிருக்கும். ஒவ்வொரு தாக்குதலையும் எவ்வாறு தடுப்பது என பார்ப் போம்.

*நாற்றழுகல்*

மண்ணிலுள்ள பலவித பங்கசுக்களால் இந்நோய் ஏற்படுகிறது. உதாராணமாக பித்தியம் (Pythium) றைசொக்ரோனியா (Rbizoctonia) பைற்றொவ் தரா (Phytophthora) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*நோய் அறிகுறிகள்*

* விதை முளைப்பது குறைவடையும்
* நாற்றுக்களின் அடிப்பகுதி கறுப்பு நிறமாகி விழும்
* நாற்றின் அடியும் வேர்களும் கறுப்பு நிறமாகும்.
* இறுதியில் நாற்று கழுத்துப் பகுதியில் முறியும்.

*கட்டுப்பாடு*

* நீர்வடியும், முன்பு மிளகாய் பயிரிடாத இடத்தில் நாற்று மேடைகளை அமைக்கவும்
* மேடைகளை எரித்தல் அல்லது சூரிய ஒளி மூலம் தொற்று நீக்கவும்.
* 7-10 நாட்களுக்கு ஒருமுறை 10 கிராம் கப்ரான் அல்லது திராமை 10 லீற்றர் நீரில் கரைத்து ஊற்றவும்

*அந்திரக்நோசு நோய்*

கொலற்றோரிக்கம் கப்சிசி (Colletrotrichum Capsici) எனும் பங்கசுவினால் இது ஏற்படுகிறது.

*நோய் அறிகுறிகள்*

* ஆரம்பத்தில் நுனிகளில் இருந்து கிளைகள் இறக்கத் தொடங்கி முழுத் தாவரமும் இறக்கும்.
* காய்களில் சாம்பல் - கபில நிற தாழ்ந்த புள்ளிகள் ஏற்படும். பின்பு இப்புள்ளிகளில் ஒரு மைய வட்டங்களில் பங்கசு வித்திகள் கறுப்பு புள்ளிகளாக இருக்கும். பின் இப்புள்ளிகள் பெரிதாகி இறக்கும்.

*கட்டுப்பாடு*

* நோய் அற்ற மரங்களில் இருந்து விதைகளை எடுத்தல்
* விதைப்பரிகரணம் செய்தல்
* நோய் தாக்கி முற்றிய தாவரங்கள், காய்களை பிடுங்கி அகற்றல்
* தீவிரமான தாக்கம் ஏற்படின் காபென்டசிம் 500 g /l (Carbendazim 500g / l என்ற இரசாயனத்தை விசிறவும். இது பல்வேறு வர்த்தகப் பெயர்களில் கிடைக்கிறது. அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.



*வாடல் நோய்*

சூடோ மோனஸ் அல்லது றல்ஸ் ரோனியா சொலனேசியாரம் என்ற பற்றீரியாவினால் இந்நோய் ஏற்படுகிறது.

*நோய் அறிகுறிகள்*

* சடுதியாக தாவரங்கள் வாடும்
* தாவர வேர்களும் அடிப்பகுதியும் அழுகும்
* தண்டை வெட்டினால் நிறம் மாறி இருக்கும்
* தண்டை வெட்டி தெளித்த நீரினுள் வைக்கும் போது வெண்ணிற துணிக்கைகள் (ooze) வெளிவருவதைக் காணலாம்.

*கட்டுப்பாடு*

* தக்காளி , மிளகாய் , கத்தரி போன்ற ஒரே குடும்ப பயிர்களை ஒரே இடத்தில் திரும்ப திரும்ப பயிரிடுவதைத் தடுத்தல்
* நிலத்தில் நீர் தேங்கி நிற்பதை தவிர்த்தல்
* நோயால் தாக்கப்பட்ட தாவரங்களை அகற்றுதல்
* மண்ணைக் கொத்தி சூரிய ஒளிபட விடுதல்
* இதற்கென குறிப்பிட்டுக் கூறக்கூடிய பக்றீரியா நாசினி எதுவிமில்லை.

*இலைப்புள்ளி நோய்*

* சேர்க்கஸ் போரா கப்சிசி (Cercospora Capsici) எனும் பங்கசு இந்நோயை ஏற்படுத்துகின்றது.

*நோயின் அறிகுறிகள்*

* இலைகளில் வட்ட , கபில நிறப் புள்ளிகள் தோன்றுவதுடன் இலைகள் மஞ்சளாகி உதிரும்
* தீவிரமான தாக்கத்தின் போது தண்டுகளிலும் காய்களிலும் கூட இப்புள்ளிகள் ஏற்படும்.

*கட்டுப்பாடு*

* நோய் அற்ற மரங்களில் இருந்து விதைகளை எடுத்தல்
* விதைப்பரிகரணம் செய்தல்
* நோயுற்ற மரங்களை அகற்றுதல்
* தீவிர தாக்கம் ஏற்படின் (Carbendazim 500g / l) என்ற இரசாயனத்தை விசிறவும். இது பல வர்த்தகப் பெயர்களில் கிடைக்கிறது. தரப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.

*இலைச்சுருளல் (குருமன்)*

இதுவே மிகவும் பிரதானமான பிரச்சினையாகும். இது மிளகாய்ச் செடியின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் ஏற்படும்.

நாற்றுப் பருவத்தில் எனின் பாதிப்பு அதிகம். இந்நோய் பின்வரும் காரணிகளால் ஏற்படுகிறது. ஒன்று பீடைகளான பனிப்பூச்சிகள், ஏபிட்டுக்கள், சிற்றுண்ணி போன்றவை. இலைகளிலும் குருத்துக்களிலும் சாற்றை உறிஞ்சுவதாலும் மற்றது வெண் ஈக்களால் பரப்படும் ஒரு வகை வைரசுவினாலும் ஏற்படுகிறது.

*பனிப்பூச்சிகள்*

இவை கண்ணுக்கு தெரியக்கூடிய மிகச் சிறிய (2mm) கபில நிறமான பறக்கும் பூச்சிகள் இவை இளம் இலை, குருத்து என்பவற்றில் மேற்பரப்பை சுரண்டி சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் இலைகள் மேல் நோக்கி சுருளுகின்றன. இதன் தாக்கம் வெப்ப காலங்களில் கூடவாகும்.

*அழுக்கணவன் (ஏபிட்டுக்கள்)*

இவை சிறிய கறுப்பு நிறப் பூச்சிகளாகும். கூட்டம் கூட்டமாக இருந்து கிளைகளில் சாற்றை உறிஞ்சுவதால் தாவர வளர்ச்சி பாதிக்கப்பட்டு இலைகள் சுருளுகின்றன.

*சிற்றுண்ணிகள் (மைற்ஸ்)*

இவற்றின் நிறைவுடலிகளை கபில நிறமான புள்ளிகளாக இலையின் கீழ்ப்புறத்தே காணலாம். இவை இலையின் கிழ்ப் புறத்தில் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் கீழ்ப்புறமாக சுருளுகின்றன.அதிகளவு நைதரன் பசளை இதன் தாக்கத்தை கூட்டும்.

*வைரசு*

இவை வெண் ஈக்கள் எனப்படும். வெள்ளை நிற சிறிய பூச்சிகளால் பரப்பப்படுகின்றன. வெண் ஈக்கள் சாற்றறை உறிஞ்சிக் குடிக்கையில் வைரசையும் தாவரத்தினுள் செலுத்தி விடுகிறது. இதன் தாக்கும் பயிரின் இறுதிப் பருவத்திலேயே ஏற்படுகிறது.

*நோய் அறிகுறிகள்*

* தாவரம் கட்டையாகும்
* அதிகளவு கிளைகள் உருவாகும்
* தடித்த சிறிய இலைகள் தோன்றும் மேலும் இலைகள் மஞ்சளாகும்.

*இலைச்சுருலை கட்டுப்படுத்தல்*

* யூரியா பசளையை அதிகளவு இடுவதை தவிர்த்தல்.
* எல்லைப் பயிராக சோளத்தை பயிரிடுதல்
* உச்ச பயன் பெறும் காலத்தை வெப்ப காலத்துக்கு முன் ஏற்படுத்தக் கூடியவாறு பயிரிடுதல்
* களைகளற்ற சூழலை ஏற்படுத்தவும்.
* நோய்க்காரணியை மிகச் சரியாக இனங் கண்டு இரசாயனங்களை விசிறவும்.

**ந. திலீபன்**
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

* வைரசு நோய்க்கு எந்த இரசாயனத்தை விசிறியும் பலனில்லை. எனவே நோயுள்ள தாவரங்களை பிடுங்கி அழிக்கவும்.
* வெண் ஈக்களை கட்டுப்படுத்த புறோபென் பொஸ் என்ற இரசாயனத்தை விசிறவும். இது பல வர்த்தகப் பெயர்களில் கிடைக்கிறது. விசிறும் முன் தரப்பட்ட அறிவுறுத்தலை பின்பற்றவும்.
* சிற்றுண்ணிகளை கட்டுப்படுத்த புளுபெனோக்ஸ் யுரோன் என்ற இரசாயனத்தை விறிறவும். இது பல வர்த்தகப் பெயர்களில் கிடைக்கிறது.
* எவ்வாறாயினும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உங்கள் பகுதி விவசாய போதனாசிரியரை நாடவும். ☆☆☆

போவது சரியான பாதையாக இல்லாதபோது வேகமாக ஓடுவதால் என்ன பயன்?

– ஜேர்மன்

வலம்புரி

## செய்தவினை விடுமோ! செய்ம்மதி போகுமோ!

நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த எதிர்காலத்திற்குள் இலங்கை பிரவேசித்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'தேசத்துக்கு மகுடம்' தேசிய கண்காட்சியை திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி விரைவில் செய்ம்மதிகளை விண்ணுக்கு அனுப்பும் திட்டங்களும் இருப்பதாகக் கூறியுள்ளார்.

நாட்டில் ஒற்றுமை, சமாதானம், அமைதி ஏற்படுவதை எவரும் விருப்புடன் ஏற்றுக்கொள்வர்.

இலங்கையைப் பொறுத்தவரை இலங்கை வாழ் மக்களுக்கு உடனடியாக வேண்டியது சமாதானமே. அதிலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பெரும்பாடு படுகின்றனர்.

வன்னிப் பகுதியில் இடம்பெறும் யுத்தத்தில் ஒவ்வொருநாளும் நாற்பது,ஐம்பது என பொதுமக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

தினசரி நூற்றுக்கணக்கானோர் காயமடைகின்றனர். இப்பரிதாப நிலை எதற்காக? இந்த நாடு எல்லா இன மக்களுக்கும் உரியதென்னும் சமத்துவக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருக்குமாயின் இப்பெருந் துயரை தமிழ் மக்கள் அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் மக்கள் வருடக் கணக்கில் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

எனினும் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் சுயநலத்தை மட்டுமே கருத்திற் கொண்டு இனப்பிரச்சினையை நகர்த்திச் செல்கின்றனர்.

பண்டா –செல்வா ஒப்பந்தத்தின்போது நடந்த பேரினவாத அரசியல் சிறுமைத்தனங்கள் இன்றுவரை நீண்டு செல்கிறது.

வன்னி யுத்த களத்தில் சிக்குண்ட தமிழ் மக்கள் கதறுகின்றனர்.

இறைவா! எங்களைக் காப்பாற்று என்ற அவர்களின் அவலக்குரல் விண்ணைப் பிளக்கிறது. அவர்களின் அழுகை விண்ணைத் தட்டி பரம்பொருளை துயிலெழுப்புகிறது. நிச்சயம் இறைவன் உதவி செய்வான். அவனின் அருட் பார்வையால் வன்னியில் சிக்குண்டுள்ள தமிழ் மக்கள் காப்பாற்றப்படுவர்.

வன்னி மக்களின் அழுகை ஒலி –அவலக் குரல் விண் மண்டலத்தில் ஒலிக்கும்போது ஜனாதிபதி அவர்கள் விண்வெளிக்கு செய்ம்மதி அனுப்பும் திட்டங்கள் இருப்பதாகக் கூறுகிறார்.

இலங்கை மண்ணிலிருந்து செய்ம்மதி அனுப்புவதால் அடையப்படும் பெருமை இந்த நாட்டைச் சேர்ந்த அனைவருக்கும் உரியது.

அதற்கு முன்பாக வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் இறைவா! இறைவா! என்று எழுப்பும் அபயக்குரல் விண்ணில் வலம்வரும்போது இலங்கை விடும் செய்ம்மதி விண்ணுக்குப் போய்ச் சேர்வது முடியாத காரியமே.

முதலில் செய்த வினைக்குப் பரிகாரம் தேடுவதே பொருத்தமான காரியம் ஆகும்.

# யாழ் பல்கலைக்கழகத்தில் வலுவிழந்தோருக்கு விஷேட கல்வி வழங்க நடவடிக்கை

## துணைவேந்தர் சண்முகலிங்கன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விழிப்புலன் மற்றும் வலுவிழந்தவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தனியே வகுப்புகளை நடத்தி அவர்களுக்கான மேலதிக கல்வி வசதியை வழங்குவதற்கும் கலைப் பீடாதிபதியுடன் இணைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கூறினார்.

சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுனர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் வாழ்வகத்தின் தலைவர் ஏ. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேராசிரியர் மேலும் உரையாற்றுகையில்,

மனிதனுடைய அறிவு அனைத்தையும் வென்றுள்ளது. அந்த அறிவு மேம்பாட்டினால் விழிப்புல வலுவிழந்தவர்களும் சமூகத்தின் அனைத்து சவால்களையும் வெற்றி கொண்டு மேலெழுந்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்வியை முடித்து தொழில் உலகில் சிறப்பாக செயற்படுமளவுக்கு வல்லமை பெற்றுள்ளனர். அவர்களின் மன உறுதியும் நம்பிக்கையும் அவர்களை மேலும் மேலும் உயர்வடையச் செய்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கும் விசேட வகுப்புகளை நடத்துவதற்கும் கலைப் பீடாதிபதியுடன் இணைந்த நிலையில் ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். விழிப்புல வலுவிழந்தவர்களின் வல்லமை அனைத்துத் துறைகளிலும் பல்கிப் பெருக வேண்டும்.

வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் அவர்களின் நம்பிக்கை மேல்நிலை பெறவும் செய்துள்ளது. வாழ்வகத்தை நிறுவிய அன்னலட்சுமி சின்னத்தம்பியிடம் எதிர்காலம் பற்றிய தீர்க்கதரிசனம் இருந்துள்ளது.

அவரின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை இந்த நிறுவனம் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதன் சேவை யை உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றது. இதன் சேவையானது மேலும் பல்கிப் பெருகி உயர்வ டைய வேண்டும் என்றார்.

தொடர்ந்து செஞ் சொற்செல்வர் ஆறு திருமுருகன் உரையாற் றுகையில்,

சிறுவர்களுக்கு சிறு வயதிலேயே நல்ல காரியங்களைச் செய்வதற்கு பழக்க வேண்டும். அந்தப் பழக்கம் எதிர்காலத்தில் நல்ல பிரஜை களாக வாழ்வதற்கும் வழிகாட்டும். மேலை நாடுகளில் பாட சாலை மாணவர்கள் தர்மச் செயல்களுக்கு உதவுகின்றார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் பாடசாலைகளில் மூன்று வகையான உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. அதில் மாணவர்கள் கணிசமான அளவு கொடுப்பனவுகளை செலுத் துகின்றார்கள். பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள உண் டியல்களில் ஒன்று தமது திருச்சபைக்கானது. மற்றது ஏழை மாணவர்க்கானது.

மூன்றாவது ஏனைய தொகுதிகளிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கானது. இந்த வகையில் பாடசாலை மாணவர்களின் மத்தியில் ஏனையவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உயர் சிந்தனை உருவாகின்றது. இத்தகைய உண்டியல்களை எமது பாடசாலைகளிலும் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விசேட கல்வி தொடர்பாக இன்று பொருத்தமான விழிப்புணர்வு ஏற்படவில்லை.விசேட கல்வி தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தின் எல்லா மட்டத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும். விசேட கல்வி தொடர்பான கற்கை நெறியை பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும். அதுபட்ட பாட நெறியாக விரிவடைய வேண்டும் எனக் கூறினார்.

(ஓ–6)

## தொழிற்பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ்–கியூடெக் நிறுவனத்தினால் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தொழில் விருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்பட்டுவந்த தொழிற்பயிற்சியை, பூர்த்தி செய்த மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாரீசன்கூடல் கணனிப் பயிற்சிநிலைய பயிலுநர் பிரான்சிஸ் பிறின்சிலி விஜிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஏ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளீதரனும்,யாழ்ப்பாணம் கரித்தாஸ்–கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

(ச–14)

## தைப்பூசத் திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தைப்பூசத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று 108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து வேதபாராயணம், திருமுறை பாராயணம் ஆகியன இடம் பெற்று அம்பாள் விசேட மேளக்கச்சேரிகள் சகிதம் பகல் திருமஞ்சத்தில் எழுந்தருளி வீதி உலா வரும் திருக்காட்சி இடம் பெறும்.

அன்றைய தினம் மிகப்பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள இந்திர நந்தி (போகநந்தி ) திறப்புவிழாவும் இடம் பெறவுள்ளது.

அடியவர்களுக்கான விசேட பேருந்து சேவை, படகு சேவைகள், அன்னதானம் ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இத் திருநாளில் வருகை தந்து அம்பாளின் திருவருட் பிரவாகத்தைப் பெற்றேகுமாறு அறங்காவலர் சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

(ஓ)

## உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்

### பிரான்ஸ் அரசு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமென பிரான்ஸ் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. பல தசாப்தங்களாக நீடித்து வரும் போராட்டத்திற்கு அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலமே நிரந்தரத் தீர்வினை எட்ட முடியும் என பிரான்ஸ் இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இணைந்து நாட்டின் அனைத்து குடிமக்களது உரிமைகளையும் பேணும் வகையில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக பெருந்தொகையான பொதுமக்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் பிரான்ஸ் அரசாங்கம் இது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ–6)

## இலங்கை வங்கியினால் சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவு

உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சனசமூக நிலையப்பகுதியில் உள்ள 30 பேருக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சுன்னாகம் இலங்கை வங்கி கிளை கடன் உதவி வழங்கியுள்ளது.

காந்திஜீ சனசமூக நிலையத்தினால் வங்கி முகாமையாளரைச் சந்தித்து கோரிக்கை விடுத்ததன் பேரிலேயே இக் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஓ–134)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொள்



இலட்சியம் உள்ளவன் ஆயிரம் தவறுகளைச் செய்வானானால், இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்பது நிச்சயம். எனவே ஒரு இலட்சியம் இருப்பது சிறந்தது.

இந்த இலட்சியம் நமது இதயத்தில் புகும் வரை, நமது மூளையில் புகும்வரை, நமது நாடி நரம்புகளில் புகும்வரை, நமது இரத்தத்தின் ஒவ்வொரு துளியுடனும் கலந்து துடிக்கும் வரை ஊடுருவும் வரை, நமது உடலின் அணுக்கள் தோறும் கலந்த ஊடுருவும் வரை நாம் அதைப் பற்றிக் கேட்க வேண்டும். அதையே சிந்திக்க வேண்டும். "உள்ளம் நிறை யும் போது வாய் பேசுகிறது", அது மட்டுமல்ல ; உள்ளத்தின் நிறைவுதான் கைகளை வேலை செய்யத் தூண்டுகிறது.

# அரசின் வேண்டுகோள்களுக்கு அமையவே புதுக்குடியிருப்பு வைத்தியசாலை இடமாற்றம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமையவே ஐ.சி.ஆர்.சியினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.தற்போது அந்தப் பிரதேசத்தில் எதுவுமே இல்லை என்று சபை முதல்வர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடை பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழேயே படையினர் பல வெற்றிகளைக் கண்டுள்ளனர். மனிதாபிமான நடவடிக்கைகள் மூலமாகவே அந்த வெற்றிகள் கிடைத்துள்ளன.எனினும் இதற்கு முன்பிருந்த தலைவர்களின் கீழும் இதே இராணுவமும் இராணுவ உபகரணங்களுமே இருந்தன.

ஜனாதிபதி சுதந்திர தின உரையின் போது கூறியதுபோல மனிதாபிமான நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னரும் எமக்கு பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அவற்றை அரசாங்கம் புரிந்து வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில் புதுக்குடியிப்பு வைத்தியசாலையை மையமாகக் கொண்டே புலிகள் அதன் சுற்றுப்புறத்திலிருந்தே மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். எனவே தான் வைத்தியசாலையை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லுமாறு ஐ.சி.ஆர்.சிக்கு வேண்டுகோள் விடுத்தோம்.



ஐசி.ஆர்.சியும் அதனை ஏற்றுக் கொண்டு வைத்தியசாலையை 4 கிலோ மீற்றருக்கு அப்பால்கொண்டு சென்றுள்ளது. எனவே வைத்தியசாலை அவ்விடத்திலிருந்து இடமாற்றப்பட்டுள்ளது. அங்கு வைத்தியசாலைகள் இல்லை என்பதனால் வைத்தியசாலையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இனி மேலும் கூற முடியாது. (ஓ-6)

# கோப்பாய் லயன்ஸ் கழக நிவாரணக் கொடுப்பனவு

(நல்லூர்)

நிஷா புயல் வெள்ள அனர்த்தத்தினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 64 பேருக்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் நிவாரணம் வழங்கவுள்ளதாக கோப்பாய் லயன்ஸ் கழகத்தலைவர் ஏ.சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

இந் நிவாரணம் விரைவில் கோப்பாய் லயன்ஸ் கழக செயலகத்தில் வைத்து வழங் கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-134)

# கற்றல் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட சிறுவர் கழகங்களில் உள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள வறிய மாணவர்களுக்கு லீட்ஸ் நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஓ-134)

# அபிவிருத்திப் பணிகளினூடாக பல்வேறு மாற்றங்களை விரைவில் கொண்டுவர முடியும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்இ குடாநாடு உட்பட வடமாகாணத்தில் தற்போது திட்டமிடப்படுகின்ற வேலைத் திட்டங்கள் யாவும் புதிய முறையில் பொது மக்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்புகளுடன் முன்னெடுக்கப்படுமானால் ஓரிரு வருடங்களில் யாழ். குடாநாடும் வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளும் முழுமையான அபிவிருத்தியை அடைந்துவிடும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் குறைபாடுகள், தேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில்அமைச்சின் யாழ். அலுவலகத்தில் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் எமது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி மேற் கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து பிரதேச செயலகப் பிரிவுகள் வாரியாக தனித்தனியாக தற்போது ஆராயப்பட்டு வருவதை தெளிவுபடுத்தியதுடன் இதன்பிரகாரம் இனம் காணப்பட்டு உறுதிசெய்யப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் வெகு விரைவில் படிப்படியாக முன்னெடுக்கப்படும் என்றும் உடனடியாக மேற்கொள்ளக்கூடிய வேலைத் திட்டங்கள் அனைத்தும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இத் திட்டங்களுடன் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய வகையில் தொழிற்துறை சார்ந்த பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் தான் திட்டமிட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் இத் திட்டங்கள் யாவும் பூர்த்தியாகும் போது யாழ். குடாநாடு உட்பட வட மாகாணத்தின் கணிசமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடுமென தெரிவித்தார். (ஓ

# அரசியல் யோசனைத் திட்டத்திற்கு ஆதரவளிக்கத் தயார்

## லக்ஷ்மன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் முன்வைக்கப்படும் அரசியல் யோசனைத்திட்டத்திற்கு ஆதரவளிக்கத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அரசியல் யோசனைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான பாராளு மன்ற அதிகாரத்தை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயார் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பிலான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கக் கூடிய திட்டத்திற்கு தாம் ஆதரவளிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர் அனைத்துக் கட்சி குழுவின் நடவடிக்கைகள் நகைப்புக்குரிய வகையில் அமைந்துள்ளதென சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# ஜனாதிபதியின் சகோதரர் பசிலை பிரதமர் பதவியில் அமர்த்த முயற்சி

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஆலோசகரும், சகோதரருமான பசில் ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்தும் மறைமுக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜே.வி.பி. யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதிகார மோகத்தின் காரணமாக நடத்தப்படும் தேர்தல்கள் ஊடாக நாட்டிற்குள் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறியுள்ளார்.யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காக அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறும் ஜனாதிபதி, தேர்தல்களை நடத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் கட்சி, நிறம், மத, இன பேதங்களை உருவாக்கி, குடும்ப அதிகாரத்தைக் கட்டியெழுப்பும் தனது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றி வருவதாகவும் விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ-6)


# சிறந்த நூல்களுக்கான பரிசுப்போட்டிகள்-2008

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வரோதயநகர், திருகோணமலை

வடமாகாண சபைக்கு உட்பட்ட 5 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

- *நாவல்*
- *சிறுவர் இலக்கியம்*
- *சிறுகதை*
- *இலக்கிய ஆய்வும் விமர்சனமும்*
- *கவிதை*
- *உயர்கல்வி*
- *நாடகம்*
- *பல்துறை*

**போட்டி விதிகள்**

1) ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
2) நூலாசிரியர் வடமாகாணத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3) நூல்கள் 2008 ஆம் ஆண்டு ஜனவரி-1ஆம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்குமிடையில் அச்சில் வெளிவந்தவையாக இருத்தல் வேண்டும்.
4) போட்டிக்கு 4 நூல்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5) நூலாசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும்.
6) போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறதியானது.

நூற் பிரதிகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 2009.04.30 ஆம் திகதி. நூல்களை பதிவு அஞ்சல் மூலம்.

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்,
வரோதயநகர்,
திருகோணமலை.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (C/2110)




பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தில் நிகழ்ந்த தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் அதிபர் சு.மோகனராஜன் பிரதம விருந்தினரான யோ. அ.தவநாயகம் , உப அதிபர் ந.புவனேந்திரன், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம்.

# இங்கிலாந்து வீரர்களுக்கு அதிக விலை

(கோவா)

ஏப்ரல் 10ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரை நடைபெற உள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் இங்கிலாந்து வீரர்கள் அன்ட்ரூ பிளின்டொப்,கெவின் பீற்றர்சன் ஆகியோர் 7 கோடியே 35 இலட்சம் ரூபாய்க்கு (இலங்கை மதிப்பில் சுமார் ரூபாய்17 கோடியே 30 இலட்சம்) ஏலம் எடுக்கப்பட்டு உள்ளனர். இது கடந்த ஆண்டு அதிகபட்சமாக ஏலம் எடுக்கப்பட்ட இந்திய அணித்தலைவர் மகேந் திரசிங் தோனியைவிட 1 கோடியே 35 இலட் சம் ரூபாய் அதிகமாகும்.

இந்திய கிரிக்கெட் சபையின் துணை அமைப்பான இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.) சார்பில் இருபது–20 கிரிக்கெட் போட்டிகள் கடந்த ஆண்டு மே மாதம் நடத்தப்பட்டு மிகப்பெரிய வெற்றியை பெற்றன. இந்த வெற்றியை அடுத்து இரண்டாவது ஆண்டாக இந்த ஆண்டும் ஐ.பி.எல். இருபது–20 தொடரை நடத்துகிறது.

இதில் கலந்து கொள்ள முடியாது என்று அவுஸ்திரேலிய வீரர் மைக்கெல் கிளார்க் அறிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பு சிறிதளவு தாக்கத்தைக் கூட ஐ.பி.எல். ஏலத்தில் ஏற்படுத்தவில்லை. எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதிவரை நடைபெற இருக்கும் இந்த தொடரில் பங்கேற்பதற்காக சுமார் 50 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டனர்.

கோவாவில் இந்த ஏலம் நேற்று நடை பெற்றது. அதிகபட்சமாக இங்கிலாந்து வீரர்கள் கெவின் பீற்றர்சன்,அன்ட்ரூ பிளின் டொப் ஆகியோர் தலா 15 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு (இலங்கை ரூபாயில் சுமார் 17 கோடியே 30இலட்சத்திற்கு) ஏலம் எடுக்கப்பட்டனர்.

பீற்றர்சனை விஜய் மல்லையாவின் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஏலம் எடுத்தது. பிளின்டொப் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு கிடைத்துள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த ஏலத்தில் தோனி 6 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டது தான் மிக அதிகமாக இருந்தது.இந்த ஆண்டு அதை விட அதிகமாக இங்கிலாந்து வீரர்கள் இருவரும் ஏலம் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மும்பை இந்தியன்ஸ் அணி தென்னாபிரிக்காவின் டுமினியை 9 இலட்சத்து 50 ஆயிரம் டொலருக்கும் (இலங்கை ரூபாயில் சுமார் 10 கோடியே 92 இலட்சம்), ராஜஸ்தான் றோயல்ஸ் அணி அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஷான் தைய்ட்டை 3 இலட்சத்து 75 ஆயிரம் டொலருக்கும் (இலங்கை ரூபாயில் சுமார் 4 கோடியே 32 இலட்சம்) ஏலம் எடுத்துள்ளது.

டில்லி டேர்டெவில்ஸ் அணி இங்கிலாந்து வீரர்கள் போல் கொலிங்வூட் (இலங்கை ரூபாயில் 3 கோடியே 17 இலட்சத்து 25 ஆயிரம்), ஓவைஸ் ஷா (இலங்கை ரூபாயில் 3 கோடியே 14 இலட்சத்து 9 ஆயிரம்) ஆகியோரை வாங்கியுள்ளது. மற்ற வீரர்களை வாங்க எந்த அணியும் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஐ.பி.எல். தனது பட்ஜெட்டை 25 சதவீதம் உயர்த்தியிருப்பதாக ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் லலித் மோடி கூறியிருக்கிறார்.

## ஆஸியை பின்தள்ளி இந்தியா 2ஆம் இடத்தில்

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சிறந்த ஒருநாள் அணிக்கான தரவரிசையை நேற்று வெளியிட்டது. இதில் சமீபத்தில் தொடர் வெற்றிகளை குவித்து வரும் தோனி தலைமையிலான இந்திய அணி 122 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு போட்டியில் தோல்வியடைந்துள்ள அவுஸ்திரேலிய அணி 121 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.

தென்னாபிரிக்க அணி 125 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியா– இலங்கை அணிகளுக்கு இடையில் நாளை கொழும்பில் நடக்கவிருக்கும் கடைசி போட்டியில் இந்தியா வெற்றி பெறும் பட்சத்தில் முதலிடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளது.

# இரண்டாவது போட்டியிலும் நியூசிலாந்திடம் வீழ்ந்தது ஆஸி.

எலியோட்–ரெய்லரின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரில் 2:0 என முன்னிலை பெற்றது. அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போதும் அவுஸ்திரேலிய அணியை மீட்க முடிய வில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி சப்பல்–ஹாட்லி கிண்ணத்திற்கான 5 போட்டி கள் கொண்ட ஒருநாள்தொடரில்விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று நியூசிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று மெல் போர்னில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி கிளார்க்–மைக்கெல் ஹசியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 98 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி 75 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஓபிறின் 2 விக்கெட்டுக்களையும் மில்ஸ், சௌத்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 226 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி எலியோட்–ரெய்லரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 48.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 226 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் எலியோட் 61 ஓட்டங்களையும் ரெய்லர் 47,மக்குலம் 43, மற்றும் புரூம் 26 ஓட்டங்களையும் எடுத்தனர். அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் 20 ஓட்டங்களை உதிரியாக அள்ளி வழங்கினர்.

பந்துவீச்சில் ஹோப்ஸ் 2 விக்கெட்டுக்களையும் பிறக்கன்,ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 20 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி சவாலான இலக்கையடைய அடித்தளம் அமைத்த அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை சிட்னியில் நடைபெறுகிறது.

# ஹயில்–சர்வான் ஜோடி ஜொலிப்பு மேற்கிந்திய தீவுகள் சிறப்பான ஆரம்பம்

அணித்தலைவர் ஹயில்–சர்வானின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியதீவுகள் அணி நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 160 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முன்னதாக முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 318 ஓட்டங்களை எடுத்தது.

மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 4ஆம் திகதி ஜமெய்காவில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல்நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 236 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 318 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் பீற்றர்சன் 97 ஓட்டங்களையும் பிறிர் 64 ஓட்டங்களையும் பிளின்டொப் 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பென் 4 விக்கெட்டுக்களையும் ரெய்லர் 3 விக்கெட்டுக்களையும் பவன் 2 விக்கெட்டுக்களையும் ஹயில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி ஹயில்–சர்வானின் சிறப்பான 142 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 160 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சர்வான் 74 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹயில் 71 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் பிளின்டொப் ஒருவிக்கெட்டை வீழ்த்தினார். மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது.

# நீச்சல் சாதனை நாயகன் பெல்ப்ஸ் மூன்று மாதங்கள் இடை நிறுத்தம்

## அமெரிக்க நீச்சல் சங்கம் உத்தரவு

(வோஷிங்டன்)


அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கெல் பெல்ப்ஸை 3 மாதங்கள் இடைநிறுத்தி அமெரிக்க நீச்சல் சங்கம் உத்தரவிட்டுள்ளது. மைக்கெல் பெல்ப்ஸ் 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் எட்டு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தவர்.

அண்மையில் ஒரு பத்திரிகையில் மைக்கெல் பெல்ப்ஸ் மாரிஜுவனா பைப்புடன்–(சிகரெட் போன்ற புகை பொருட்களை புகைக்க பயன்படுத்தப்படும் குழாய்) இருந்த காட்சி வெளியானது. இதனை தொடர்ந்து அந்த பைப்பில் தடை செய்யப்பட்ட போதை வஸ்துக்கள் இருந்ததாகவும், பெல்ப்ஸ் போதை பொருட்களை பயன்படுத்துகிறார் எனவும் புகார் எழுந்தது.

இது குறித்து விசாரணை நடத்தி வருவதாக ரிச்லாண்ட் நகர ஷெரீப் தெரிவித் தார். மேலும் பெல்ப்ஸ் மாரிஜுவனா பைப்பை உபயோகப் படுத்துவது நிரூபிக்கப்பட்டால் மற்றவர்களுக்கு என்ன தண்டனை விதிக்கப்படுமோ அதே தான்,பெல்ப்ஸுக்கும் வழங்கப்படும் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் தடை செய்யப்பட்ட போதை வஸ்துக்களை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த பெல்ப்ஸை அமெரிக்க நீச்சல் சங்கம் 3 மாதங்கள் இடைநிறுத்தியுள்ளது. மேலும் அவருக்கு வழங்கிய வரும் நிதியுதவியையும் 3 மாதங்களுக்கு நிறுத்தி வைப்பதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# எண் விளையாட்டு–05




**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வரவேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



## அரசியல் தீர்வு காண்பதற்கு...

இந்தியா சென்றிருந்த எரிக் சொல்ஹெய்ம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோருடன் சந்திப்பை மேற்கொண்டதன் பின்னர் ஊடகத்திற்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எரிக் சொல்ஹெய்ம் கூறுகையில், இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்பதை விடுதலைப் புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அமைதியான முறையில் அரசியல் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும்.

போரை நிறுத்துவதற்கு புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு கொழும்புடன் இணங்கிப் போக வேண்டும் என்பதையே நோர்வே, ஜப்பான்,ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா இணைந்த இணைத்தலைமை நாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையிலும் வெளிப்படுத்தியிருந்தது என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (ச-5)

## படையினரின் விபரம் அறிய உறவினர்கள் முண்டியடிப்பு

விடுதலைப் புலிகளுடன் வன்னியில் நடைபெற்றுவரும் மோதல்களில் கொல்லப்பட்ட, காயமடைந்த படையினரின் உறவினர்கள் பலர் கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்திற்குச் சென்று தமது பிள்ளைகள், கணவன்மார் குறித்து உடனடியாகத் தகவல் தருமாறு கோரி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வன்னியில் இதுவரை நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட நூற்றுக்கும் அதிக மான படையினரின் உடல்கள் எதுவும் உறவினர்களிடம் கையளிக்கப்படவில்லையெனவும் இதனால் சந்தேகம் கொண்ட உறவினர்கள் கொழும்பு இராணுவத்தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு விபரங்களைத் தருமாறு அழுத்தம் கொடுக்கின்றனர் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-5)

## 2,700 சிவிலியன்...

தஞ்சமடைந்ததாக இராணுவத்தலைமையகம் கூறியுள்ளது.

நேற்றுக் காலை ஆயிரத்து 600 ற்கும் மேற்பட்டோர் தர்மபுரம், விசுவமடு பிரதேசங்களில் படையினரின் முன்னரங்க நிலைகளிற்கு வந்து தஞ்சமடைந்ததாகவும் நேற்று மாலை ஆயிரத்து 100 ற்கு அதிகமானோர் விசுவமடு பகுதியில் படையினரிடம் தஞ்சமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

இம்மக்கள் அனைவரும் அங்குள்ள இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டு பின்னர் வவுனியா முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (ச-14)

## வடக்கில் பொதுமக்களுக்கு...

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து வினவியபோதே ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் இலங்கையின் வடக்கே பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த சிவிலியன்களின் நிலைபற்றியும் பான் கீ மூன் ஜனாதிபதியிடம் வினவியுள்ளார்.

புலிகள் அமைப்புக்கு எதிராக மனிதாபிமான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டி இலங்கையின் பாதுகாப்புப் படையினர் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகவும் பயங்கரவாதிகளால் மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களை விடுவிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமைப்பாடாகும் என்றும் ஜனாதிபதி, பான் கீ மூனுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சுமார் 15 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்த இத் தொலைபேசி உரையாடலின்போது அப்பாவிப் பொதுமக்களை விடுவிப்பதோடு ஆயுதங்களைக் கீழே வைத்து வன்முறைக்கு முடிபுகட்ட வேண்டும் என டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் அண்மையில் விடுத்த கோரிக்கையினை புலிகள் அலட்சியம் செய்துவிட்டமையையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ச-5)

## இலங்கைக்கு...

பிரிட்டிஷ் அரசு விற்பனை செய்யும் ஆயுதங்கள் இலங்கையின் வட பகுதியில் மோதல் நடைபெறும் இடங்களில் பயன்படுத்தப்பட்டால் ஆயுத விற்பனை தொடர்பான பிரிட்டிஷ் அரசின் வெளிநாட்டு விதிகளை மீறுவதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் போரை நிறுத்த வேண்டுமென்று பிரிட்டன் உட்பட அனைத்து தரப்பினரும் வலியுறுத்த தொடங்கியுள்ள நிலையில் பிரிட்டன் அரசின் இவ்வாறான நடவடிக்கை அந்நாட்டு அரசின் நிலைப்பாடு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.சி மேலும் கூறியுள்ளது. (எ-14)

## செஞ்சிலுவைச் சங்கம்...

பைகளை வாங்க செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்ததாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

வழமை போன்று தாம் பிரேதப் பைகளை வாங்கியதாக கூறுகின்ற செஞ்சிலுவைச் சங்கம் ஆனால் தாம் வாங்கிய பைகளின் எண்ணிக்கைக்கும் அரசாங்கம் கூறும் எண்ணிக்கைக்கும் நிறைய வேறுபாடு இருப்பதாக கூறியுள்ளது.

கொழும்பில் உள்ள தமது அலுவலகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கல் வீசித்தாக்கப்பட்டதாகவும் தமது அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

அதேவேளை வடபகுதி மோதல்களில் அகப்பட்டுள்ள இரண்டரை லட்சம் மக்கள் உணவு நெருக்கடியை எதிர்கொள்வதாக உலக உணவுத்திட்டம் எச்சரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடுப்பகுதிக்கு பின்னர் அங்கு உணவு வாகனங்களை. தம்மால் அனுப்பமுடியாமல் இருப்பதாக உலக உணவுத்திட்டம் கூறியுள்ளது. (ச-14)

## காலை முதல் மாலை வரை...

செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை தேவிபுரம் ஆற்றங்கரைப் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக் களின் குடிசைகள் மீது நேற்று முழுநாளும் ஆட்லறி எறிகணை மற்றும் பல்குழல் வெடிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் 2 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

சுதந்திரபுரம் வீட்டுத்திட்டம் மீது நேற்றுப் பிற்பகல் 4.35 மணியளவில் வீழ்ந்துவெடித்த ஆட்லறி எறிகணை, பல்குழல் எறிகணை மற்றும் பீரங்கிகளால் 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 75 பேர் காயமடைந்துள்ளனர்.

மூங்கிலாறு பகுதியில் நேற்று முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் 11 பேர் பலியாகியுள்ளனர்.

உடையார்கட்டு பகுதியில் 8 பேரும் வள்ளிபுனம் பகுதியில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மூங்கிலாறு, உடையார்கட்டு, வள்ளிபுனம் ஆகிய மூன்று இடங்களிலும் நடந்த தாக்குதல்களில் மட்டும் மொத்தமாக 64 பேர் காயமடைந்துள்ளனர். (ச-5)

## சர்வதேச செஞ்சிலுவைச்...

தையடுத்து உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொழும்பிலுள்ள ஏனைய அனைத்துலக தொண்டு அமைப்புகளும் தமது அலுவலகத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறு அரசாங்கத்திடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளன.

வாகனம் ஒன்றில் சென்ற இளைஞர் குழுவினர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் விடுதலைப் புலிகளின் ஊது குழல் எனக் கூறி சத்தமிட்டவாறு தாக்குதல் நடத்தியதாக சங்கத்தின் காவலாளிகள் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்படுவீர்கள் என சத்தமிட்டதாகவும் மற்றொரு தகவல் கூறுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் படையினரின் வெற்றிகளை திசை திருப்பும் வகையில் பொய்யான தகவல்களை வெளியிட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குற்றம் சாட்டி சில மணிநேரத்தில் இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும் வீசப்பட்ட குண்டுகள் எரிவாயுத் தன்மை கொண்டவை எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சமீபத்தில் குற்றம் சாட்டியிருந்தது.

அத்துடன் போர் விதிமுறைகளுக்கு மாறாக படையினர் செயற்படுவதாகவும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழ் மக்களின்...

இலங்கை அரசாங்கத்தையும் படைகளையும் நம்பி இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு அச்சம் தெரிவித்து வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் சிறப்பு பிரதிநிதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு எடுத்துக் கூறியுள்ளது.

அனைத்துலக குழுவொன்றை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் இடம்பெயர்ந்த மக்களின் நலன்கள் கண்காணிக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

கொழும்புக்குச் சென்றுள்ள ஐ.நா. சிறப்பு பிரதிநிதி ராம்ரட் சாமுவேலை நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடிய போதே கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப்பிரதித் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையிலான கூட்டமைப்பின் அமைப்பாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐ.நா. சிறப்பு பிரதிநிதி ராம்ரட் சாமுவேலுடன் கொழும்புக்கான வதிவிடப் பிரதிநிதி நில் பகுனேயுடன் ஐ.நா. அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஐ.நா. சிறப்பு பிரதிநிதி ராம்ரட் சாமுவேலிடம் விளக்கிக் கூறிய விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தகவல் தருகையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வவுனியாவில் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த இளைஞர்கள், இளம் குடும்பஸ்தர்கள் மற்றும் பெண்கள் உட்பட 100க்கும் அதிகமானோர் புலனாய்வுத்துறையினால் கைதாகி பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் பாலியல் வல்லுறவின் பின்னர் கொலை செய்யப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளனர். வேறு சிலர் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இந்நிலையில்அரசாங்கம் அமைத்துள்ள முகாம்களில் பொதுமக்கள் எவ்வாறு தங்க முடியும்?

எனவே ஐ.நாவின் மேற்பார்வையில் தற்காலிக முகாம்கள் அமைக்கப்படவேண்டும். அப்போது தான் போர் நடைபெறும் பிரதேங்களில் இருந்து மக்கள் வெளியேறி வருவார்கள். விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் மக்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படவேண்டும்.

வேறு முகாம்களில் குடியமர்த்தி அடிமைகளாக வைத்திருப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது. ஆகவே ஐ.நா. அதற்கு இடமளிக்கக் கூடாது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியேறி வந்த இளைஞர்கள், பெண்கள் பலர் சூனியப் பிரதேசங்களில் வைத்து படையினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு வெளியேறி வந்தவர்களில் குழந்தைகள்,வயோதிபர்கள், சிறுவர்கள் மாத்திரமே வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களை பாதுகாப்பாக கொண்டுவந்ததாக அரசாங்கம் பொய்யான பிரசாரத்தில் ஈடுபடுகின்றது. ஆகவே இந்த இனப்படுகொலையை அனைத்துலகம் வெறுமனேபார்த்துக் கொண்டிருக்காமல் தடுத்து நிறுத்த உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பாதுகாப்பை ஐ.நா. பொறுப்பேற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக அவர்கள் தெரிவித்தனர். (எ-5)


**Hatton National Bank**

**அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.12.2007இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத , காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 14.02.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

❖ *கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒருபகுதியையும் (ரூபா. 500) செலுத்தி*

*அல்லது*

❖ *தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.*

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

– ஹற்றன் நஷனல் வங்கி

(C-2111)





(C-2114)



**Microsoft**

**Systems Engineer MCP - MCSE**

A+ (ComTIA Hardware Technician-AUSTRALIA)
கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.

Rs.16000 DISCOUNT 09.01.2009 வரை

புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.02.2009 07.00AM/12.00PM

**Become an Engineer**

விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP

பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

(C-2113)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.